விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 312 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 10 வெள்ளிக்கிழமை (27.10.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## 20 ஆயிரம் சம்பள உயர்வு கோரும் அரச ஊழியர்கள்

(கொழும்பு)

இந்த வருட வரவு செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு 20,000 ரூபாய் சம்பள அதிகரிப்பு தேவையென தேசிய தொழிற்சங்க நிலையம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அதன் அழைப்பாளர் வசந்த சமரசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை, நேற்று முன்தினம் ஆசிரியர்களின் போராட்டத்தின் மீது நீர் மற்றும் கண்ணீர் புகை வீச்சுக்கு கண்டனம் தெரிவிப்ப 15

## நகர அபிவிருத்தியை ஆராயும் குழு தலைவராக சி.வி.கே. சிவஞானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள எட்டு அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் ஆராயும் 15

## 23 வயது இளம் குடும்பஸ்தர் அடித்துப் படுகொலை

### கிளிநொச்சியில் சம்பவம்



(கிளிநொச்சி)

23 வயது இளம் குடும்பஸ்தர் ஒருவர் அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். 15

## மூன்று நாட்களுக்கே சீன கப்பலுக்கு அனுமதி

(கொழும்பு)

சீன ஆய்வுக்கப்பலுக்கு 3 நாட்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது கப்பலுக்கு தேவையான பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்காக மாத்திரம் கொழும்பு துறைமுகத்துக்கு வர அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தக் கப்பலுக்கு நாளை 28ஆம் திகதி வரை கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக வெளி 15

# யாழில் பொலிஸாரின் செயற்பாடு மந்தம்

## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் சிறீதரன் எம்.பி காட்டம்



- யாழில் தொடர்ந்து இராணுவத்தை நிலைநிறுத்த பொலிஸார் முயற்சிப்பதாக குற்றச்சாட்டு.
- முடியாவிட்டால் அதிகாரத்தை மாகாணத்திடம் தருமாறு கோரிக்கை.

(02ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலைகளுக்கு 2ஆம் தவணை விடுமுறை

(கொழும்பு)

அரசாங்கம் மற்றும் அரசு அங்கீகரித்த தனியார் பாடசாலைகளுக்கு 2ஆம் தவணை விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கல்வி அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது.

இதனடிப்படையில், தமிழ் மற்றும் சிங்கள மொழி மூல பாடசாலைகளுக்கான இரண்டாம் தவணை விடுமுறை இன்று வழங்கப்பட 15

## சுமந்திரன் வெளியேறியதால் பரபரப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் இருந்து யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் வெளியேறியமையால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

யாழ்ப்பாணமாவட்ட 15

## காங்கேசன்துறை ஜனாதிபதி மாளிகை தனியார் பல்கலைக்கு வழங்கப்படவில்லை

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

(யாழ்ப்பாணம்)

காங்கேசன் துறையில் அமைக்கப்பட்டுள்ள ஜனாதிபதி மாளிகை தனியார் பல்கலைக்கழகத்துக்கு குத்தகைக்கு வழங்கப்படவில்லை எனத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, குறித்த மாளிகைக்கு நேற்று கள விஜயம் மேற்கொண்டார்.

குறித்த ஜனாதிபதி மாளிகையானது தனியார் பல்கலைக்கழகத்திற்கு நீண்ட காலக் குத்தகைக்கு வழங்கப்படுவதற்கான பூர்வாங்க பணிகள் நிறைவடைந்துள்ளதாக ஊடகச் செய்திகள் வெளியாகியுள்ள நிலையில், நேற்று காலை இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் குறித்த 15

## யாழ்.பல்கலையில் திருமந்திர ஆன்மீக மாநாடு

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவசித்தாந்தத்துறையும் அகில இலங்கை சைவ மகாசபையும் 02

## மின் கட்டண அதிகரிப்புக்கு எதிராக யாழில் தீப்பந்தப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

மின்கட்டண அதிகரிப்பிற்கு எதிராக தீப்பந்த ஊர்வல போராட்ட பேரணியொன்று யாழில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் அக்கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் தலைமையில் நேற்றிரவு இப்போராட்டம் நடைபெற்றது. 02



## அதிக போதைப் பாவனை யாழில் இளைஞன் மரணம்

(யாழ்ப்பாணம்)

அளவுக்கதிகமாக போதைவஸ்து பாவனை காரணமாக யாழில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உடுவில் பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபரின் சகோதரர்கள் வெளிநாட்டில் வசித்து வரும் நிலையில் இவர் தனது தாயாருடன் உடுவில் பகுதியில் வசித்து வந்துள்ளார்.

இந்நிலையில் அவர் நேற்று முன்தினம் காலை கழிப்பறைக்கு சென்று விட்டு நீண்ட நேரம் திரும்பி வரவில்லை. 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழில்...

நேற்று இடம்பெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் சட்டவிரோத மணல் கடத்தல் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டபோது இவ்வாறு தெரிவித்தார்.

அண்மைய நாட்களில் பொலிஸாரின் செயற்பாட்டினை பார்க்கும்போது எதற்கு எடுத்தாலும் இராணுவத்தினரை பயன்படுத்த வேண்டும் எனக் கூறுகின்றார்கள்.

குறிப்பாக யாழ். மாவட்டத்தில் பொலிஸாரின் செயற்பாடு மந்தகதியில் இடம் பெறுவதற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம். அதாவது இராணுவத்தினை யாழில் தொடர்ச்சியாக இங்கே நிலை நாட்டுவதற்காக கூட இந்த செயற்பாடுகள் அமைந்திருக்கலாம்.

கொழும்பில் ஜனாதிபதிக்கு எதிராக ஒருவர் முகப்புத்தகத்தில் பதிவிட்டால் உடனே கைது செய்கின்றார்கள். போராட்டம் நடத்தினால் கைது செய்கிறார்கள்.

ஆனால் யாழ்ப்பாணத்தில் அச்சுறுத்தும் வகையில் பட்டப்பகலில் கூடி கேக் வெட்டியவர்களை கைது செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டபோதும் இன்று வரை 8 பேரை மட்டுமே கைது செய்துள்ளார்கள்.

இதிலிருந்து எமக்கு ஒன்று புரிகின்றது. பொலிஸாரின் செயற்பாடு மிக மந்தகதியில் உள்ளது அதாவது யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினரை நிலை நாட்டுவதற்காகவே பொலிஸார் இவ்வாறு செயல்படுகிறார்களா என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

எனவே இந்த விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் அல்லாதுவிட்டால் பொலிஸ் அதிகாரத்தினை மாகாணத்திடம் தாருங்கள் எனவும் கோரினார்.(ம-7.33)

## மின் கட்ட...

யாழ் நல்லூர் பகுதியிலுள்ள அக் கட்சியின் அலுவலகத்தில் ஆரம்பிக்கப்பட்ட தீப்பந்த ஊர்வல பேரணியானது இளங்கதிர் சனசமூக நிலையம் வரை சென்று நிறைவுபெற்றது.

இப் போராட்டத்தில் கட்சியின் அமைப்பாளர்கள், கட்சிப் பிரதிநிதிகள் ஆதரவாளர்கள் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை தற்போதைய அரசாங்கத்தின் மின்சார அதிகரிப்பிற்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியினால் நாடாளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற இப் போராட்டத்தின் தொடராக யாழிலும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-7.33)

## திருமந்திர...

இணைந்து நடாத்தும் திருமந்திர ஆன்மீக மாநாடு நாளை இடம்பெறவுள்ளது. யாழ்.பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் காலை 08.30 மணிக்கு இந்த மாநாடு ஆரம்பிக்கப்படவுள்ளது. "ஒன்றே குலமாய் திருமந்திரம் காட்டும் அன்பே சிவத்திற்கு உயிர் கொடுப்போம்" எனும் தொனிப்பொருளில் இந்த மாநாடு இடம்பெறவுள்ளது. (ம-7)

# யாழ். நகர் பகுதியில் நூதன முறையில் திருட்டு

## இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகரில் கடந்த சில நாட்களாக நூதனமான முறையில் கடைகள் மற்றும் வீடுகளில் காஸ் சிலிண்டர்கள் திருடிய இருவர் யாழ்ப்பாண குற்றத் தடுப்பு பிரிவினரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 10 ற்கும் மேற்பட்ட காஸ் சிலிண்டர்கள் மீட் கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண பொலிஸ் நிலைய குற்றதடுப்பு பொலிஸ் பிரிவினர் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர்கள் போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் எனவும் போதைப் பொருள்களை கொள்வனவு செய்வதற்காகவே காஸ் சிலிண்டர் திருடியதாகவும் ஆரம்ப விசாரணையில் தெரிவித்துள்ளனர்

மேலும் கைது செய்யப்பட்டவர்கள் குருநகர் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் விசாரணைகளின் பின் நீதிமன்றத்தின் முற்படுத்துவதற்குரிய நடவடிக்கையினை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர் யாழ்ப்பாண பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஹேமச்சந்திர தலைமையிலான பொலிஸ் அணியினரால் குறித்த கைது சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7.33,104)

# யாழ்.நகரில் அமைந்துள்ள

## வர்த்தக நிலையத்தில் தீ பரவல்

யாழ். நகரில் காங்கேசன் துறை வீதியில் உள்ள கடையொன்று தீப்பற்றியதில் சேதம் ஏற்பட்டுள்ளது.

கோயில் சிலைகள் பித்தளை உபகரணங்கள் விற்பனை செய்யும் கடையொன்றிலேயே நேற்று இரவு குறித்த சம்பவம் இடம்பெற்றது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற யாழ் மாநகர சபை தீயணைப்பு படையினர் தீப்பரவலினை கட்டுப்பாடுக்குள் கொண்டு வந்தனர்.

இதனால் அப்பகுதியில் சில மணி நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

ஆரம்ப கட்ட விசாரணைகளின் அடிப்படையில் மின்னொழுக்கு காரணமாக குறித்த தீ விபத்து ஏற்பட்டதாக தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7.33)


# பச்சிலைப்பள்ளி பிரதேச சபை - பளை

## மீள்சுழற்சிக்குரிய திண்மக்கழிவு விற்பனைக்கான கேள்வி கோரல் - 2023

எமது சபையினால் கழிவகற்றல் முறைமையின் கீழ் சேகரிக்கப்பட்டு தரம் பிரிக்கப்பட்ட பிளாஸ்ரிக் கழிவு, பொலித்தீன் கழிவு, தகரக் கழிவு மற்றும் கண்ணாடிக் கழிவு ஆகியவற்றினை விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் பொருட்டு தரம் பிரிக்கப்பட்ட இக்கழிவுகளை ஒரு வருட காலத்திற்கு செல்லுபடியாகும் வண்ணம் ஒரு கிலோகிராமிற்கான கேள்விகள் எம்மால் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி | :- | 27.10.2023 தொடக்கம் 09.11.2023 (அலுவலக நேரம்) |
| கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி | :- | 10.11.2023 பிற்பகல் 2.00 மணி |
| கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி | :- | 10.11.2023 பிற்பகல் 2.00 மணி |
| கேள்வி திறக்கப்படும் இடம் | :- | பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, தலைமை அலுவலகம் |

**நிபந்தனைகள்**

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்
02. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப் பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமூகமளிக்க வேண்டும்.
03. கேள்விப்படிவக் கட்டணமாக ரூபா.500.00ஐ செலுத்தி இரண்டு படிவங்களை பெற்றுக் கொள்ள வேண்டும்
04. மீளளிக்கப்படக்கூடிய கேள்விவைப்புப் பணமாக ரூபா.5000.00 செலுத்தப்பட வேண்டும்
05. கேள்விப் படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை **"செயலாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை"** என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி"** என்ற முகவரிக்கு 2023.11.10 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
06. கூடிய கேள்வித் தொகை சமர்ப்பித்ததன் அடிப்படையில் தெரிவு செய்யப்படும் கொள்வனவுதாரர் உரிய கொடுப்பனவினை செலுத்தி மீள்சுழற்சிக் கழிவுகளை பெற்றுக்கொள்ள முடியும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.
07. கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
08. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு.
09. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் நேரடியாகவே அல்லது 024 324 3544 எனும் அலுவலக தொலைபேசி இலக்கத்தில் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

த. தர்சினி
செயலாளர்,
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை
பளை.
27.10.2023

(C-7498)



**திருமங்களஞ்சேரி கரம்பொன் சரஸ்வதி முத்திரை பயிற்சி**



**யாக சித்தர் மாதங்கி சுவாமிகள்**

தேர்வுகளில் வெற்றி கல்வியில் முதன்மை பெற

விரல் தியான முத்திரைகள பதிவு

கட்டணத்துடன் மட்டும் **இலவச பயிற்சி**

ஆரம்ப கல்வி முதல் பல்லைக்கழகமும் அதை

தாண்டி உயர் நிலைகளுக்கு

**அங்குரார்ப்பண நிகழ்வு**

இடம் நல்லூர் தேரடி 63 நாயனார் அம்பலவாணர் மண்டபம் நாளை **28.10.2023** சனிக்கிழமை காலை **9.00** மணியளவில் யோகர் சுவாமிகள் தலைமையில் மூட்டை சுவாமிகளின் லய சீடன் மாதங்கி சுவாமிகள் ஆரம்பித்து வைக்கின்றார்.

அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்து ஆசிபெறவும்.

**திருமங்களஞ்சேரி கரம் பொன் மேற்கு முருகமூர்த்தி கோயிலடி ஊர் காவற்துறை அமைந்திருக்கும் மதங்க மாமகரிஷி ஆச்சிரமம் மாணவர்களுக்கு வழங்கும் பெரும் சொத்து**

விபரங்களுக்கு
திரு ஸ்ரீ உசாந்தன் மண்டப முகாமையாளர்
0770365845
திரு ஸ்ரீ சுமணன் - 0774745241
மாதங்கி சுவாமி - 0765459560


(C-2141)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர் தொழிற்சங்கப் போராட்டத்தில் குதிக்கும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

**வெளிநாடு செல்ல எதிர்பார்த்திருக்கும் மருத்துவ அதிகாரிகளை தக்கவைத்துக் கொள்வதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தொடர் தொழிற்சங்க நடவடிக்கையை அறிவித்துள்ளது.**




மூளை வடிகால் பற்றிய அழுத்தமான பிரச்சினைக்கு சுகாதார அமைச்சகம் பாராமுகம் காட்டுவதாக அந்த சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இந்த நிலையில், நவம்பர் 1 ஆம் திகதி முதல் மறுஅறிவிப்பு வரும் வரை, முக்கியஸ்தர்களின் சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான நடமாடும் நோயாளர் காவு வாகனச் சேவைகளில் இருந்து விலக தீர்மானித்துள்ளது.

மேலும், மறுஅறிவிப்பு வரும்வரை மருத்துவமனை கடமைகளுக்கு வெளியே திட்டமிடப்பட்ட நடமாடும் மருத்துவ முகாம் உட்பட அதனுடன் தொடர்புடைய பிற கடமை நடவடிக்கைகளில் இருந்து விலகவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் முடிவு செய்துள்ளது.

அத்துடன் நவம்பர் 1ஆம் திகதிக்கு பின்னர் மாகாண அளவிலான தொழிற்சங்க நடவடிக்கையைத் தொடங்கப் போவதாகவும் சங்கம் எச்சரித்துள்ளது. (நி-5-6)

## தேங்காய் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

சந்தையில் தேங்காய் ஒன்றின் விலை வேகமாக அதிகரித்துள்ளதாக நுகர்வோர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கொழும்பு உள்ளிட்ட சில பிரதேசங்களில் தற்போது தேங்காய் ஒன்றின் விலை 120 ரூபாவாக அதிகரித்துள்ளதாக நுகர்வோர் கவலை வெளியிட்டுள்ளனர்.

பொதுச் சந்தையில் பெரிய தேங்காய் ஒன்று 100 தொடக்கம் 120 ரூபாய் வரையிலும் சிறிய அளவிலான தேங்காய் 85 தொடக்கம் 100 ரூபாய் வரையிலும் விற்கப்படுவதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், அன்றாட உணவு தயாரிப்பதற்கு அத்தியாவசியமான தேங்காயின் விலை அதிகரித்துள்ளதால் பல பிரச்சினைகளை எதிர் நோக்கியுள்ளதாக நுகர்வோர் சுட்டிக்காட்டியுள்ளனர். (நி-5-6)

# பொலிஸாரின் செயற்பாட்டைக் கண்டித்து அதிபர், ஆசிரியர்கள் இன்று போராட்டம்

### ஆசிரியர் - அதிபர் தொழிற்சங்க முன்னணி அறிவிப்பு

(கொழும்பு)

நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து ஆசிரியர் - அதிபர் தொழிற்சங்கத்தினர் கல்வி அமைச்சு முன்பாக முன்னெடுத்த போராட்டத்தின் மீது பொலிஸார் மிலேச்சத்தனமான தாக்குதலை மேற்கொண்டார்கள்.

பொலிஸாரின் முறையற்ற செயற்பாட்டுக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடளிப்போம் என ஆசிரியர் அதிபர் தொழிற்சங்க முன்னணியின் செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

பொலிஸாரின் வெறுக்கத்தக்க செயற்பாட்டை கண்டிக்கும் வகையில் இன்று வெள்ளிக்கிழமை பகல் 1.30 மணிக்கு பிறகு சகல பாடசாலைகளின் முன்பாக ஆசிரியர்கள், அதிபர்கள் எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபடுவார்கள்.

தமது உரிமைகளை பாதுகாத்துக் கொள்ள ஆசிரியர்கள், அதிபர்கள் குரல் கொடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

கொழும்பில் உள்ள ஆசிரியர் -அதிபர் தொழிற்சங்க முன்னணியின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (நி-5-6)

# தென்கொரிய போர்க்கப்பல் இலங்கை வருகை

(கொழும்பு)

தென்கொரிய கடற்படைக்கு சொந்தமான 'Gwanggaeto the Great' என்ற போர்க்கப்பல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

நேற்று வியாழக்கிழமை குறித்த கப்பல் வந்தடைந்துள்ளதோடு இந்நிகழ்வில் இலங்கைக்கான கொரிய தூதுவர் மற்றும் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தியா - பசிபிக் மூலோபாயத்தின் பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கத்துடன் இலங்கைக்கு விஜயம் செய்வதாக தென்கொரிய கடற்படை குறிப்பிட்டுள்ளது. (நி-5-6)

# ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை ஆராய இலங்கை வரும் குழு

(கொழும்பு)

இலங்கையின் மனித உரிமைகள் நிலவரம் மற்றும் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை வழங்கல் குறித்து ஆராய்வதற்காக எதிர்வரும் 30 ஆம் திகதி நால்வர் அடங்கிய ஐரோப்பிய ஒன்றியப் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு இலங்கைக்கு வருகிறது.

ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை காலம் முடிவுக்கு வந்திருக்கும் நிலையில், அதனைத் தொடர்ந்து பெற்றுக் கொள்வதற்கு இலங்கை உள்ளிட்ட நாடுகள் மீண்டும் விண்ணப்பித்துள்ள நிலையில் முக்கிய நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டனவா என பரிசீலிக்கப்பட்டு தீர்மானம் எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இலங்கைக்கு ஏற்கனவே ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை வழங்கப்பட்டபோது பயங்கரவாத தடைச் சட்டத்தை முழுமையாக நீக்க வேண்டும் அல்லது சர்வதேச நியமங்களுக்கு அமைவாக அதனைத் திருத்தியமைக்க வேண்டும் என பிரதான நிபந்தனையாக முன்வைக்கப்பட்டது.

இருப்பினும், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை கொண்டுவர அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவரும் நிலையில் அச்சட்டமூலங்களின் உள்ளடக்கத்திற்கு கடுமையான எதிர்ப்புகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்றத்தில் பின்லாந்து, போலந்து, ஜேர்மனி மற்றும் லிதுவேனியாவை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்றக் குழுவினர் எதிர்வரும் 30 ஆம் திகதி நாட்டுக்கு வருகை தரவுள்ளனர்.

சுமார் ஒருவார காலம் நாட்டில் தங்கியிருப்பதற்குத் திட்டமிட்டிருக்கும் அவர்கள், அக்காலப்பகுதியில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர். (நி-5-6)

# மின்கட்டண அதிகரிப்பால் தொழில்துறை முழுவதும் வீழ்ச்சியடையும்

## இராஜாங்க அமைச்சர் எச்சரிக்கை

(கொழும்பு)



மின்சார சபையின் நிதி நிலைமை குறித்துத் மாத்திரம் கவனம் செலுத்தினால் நாட்டில் மின்சார சபை மாத்திரமே மிகு தியாக இருக்கும் என முதலீட்டு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மின்கட்டண அதிகரிப்பை ஏற்றுக் கொள்ள முடியாது. மின்கட்டண அதிகரிப்புக்கு மின்சாரத்துறை அமைச்சரவையை விமர்சிப்பது பயனற்றது. ஏனெனில் அமைச்சரின் தனி விருப்பத்துக்கு அமைய மின்கட்டணம் அதிகரிக்கப்படவில்லை.

தற்போதைய மின்கட்டண அதிகரிப்பால் புதிய முதலீட்டாளர்களை நாட்டுக்கு கொண்டு வருவது கடினமாக உள்ள நிலையில் மீண்டும் மின்கட்டணத்தை அதிகரித்தால் சிறு மற்றும் நடுத்தர தொழிற்றுறை முழுமையாக வீழ்ச்சியடையும்.

மின்சார சபையின் நிதி நிலைமையை முகாமைத்துவம் செய்ய மின்கட்டணத்தை அதிகரித்தால் ஒட்டுமொத்த தொழிற்றுறையும் முழுமையாக வீழ்ச்சியடையும்.

இது எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தும். இரண்டாவது முறையாக அதிகரிக்கப்பட்ட மின்கட்டண அதிகரிப்பால் பெரும்பாலான ஆடைத்தொழிற்சாலைகள் இரவு நேரங்களில் இயங்குகின்றன.

தற்போதைய 18 சதவீத மின்கட்டண அதிகரிப்பை நடைமுறைப்படுத்தினால் பெரும்பாலான ஆடைத்தொழிற்சாலைகளை முழுமையாக மூட வேண்டிய நிலை ஏற்படும் என அவர் தெரிவித்தார். (நி-5-6)

# போதியளவு உரம் கையிருப்பில்-மஹிந்த அமரவீர

(கொழும்பு)

பெரும்போக நெற்செய்கைக்குத் தேவையான போதியளவு உரம் கையிருப்பில் உள்ளதாக விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர, தேவையான பிரதேசங்களுக்கு களஞ்சியசாலைகளில் இருந்து உரம் விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் விவசாயிகளுக்கு உரம் கொள்வனவிற்கான நிதியும் வழங்கப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

தனியாரிடமும் போதியளவான உரம் காணப்படும் நிலையில், விவசாய நடவடிக்கைகள் முழுமையாக ஆரம்பிக்கப்படாமையின் காரணமாக உர விற்பனை குறைவாகக் காணப்படுகிறது.

இந்நிலையில், ஏதேனும் பிரச்சினை அல்லது அதிகாரிகள் மட்டத்தில் தவறுகள் காணப்படும் பட்சத்தில் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கத் தயாராக உள்ளதாகவும் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# படையெடுத்த இலங்கை சிங்கங்கள் தெறிச்சு ஓடிய நடப்புச் சம்பியன்கள்

## இங்கிலாந்துக்கு தொடர் கதையாகும் தோல்விகள்

மத்யூஸ், புஸ்ப குமார ஆகியோரின் சிறப்பான பந்து வீச்சு கைகொடுக்க 'நடப்பு சம்பியன்' இங்கிலாந்து அணியை தெறிக்கவிட்டது இலங்கை சிங்கங்கள்.




5 போட்டிகளில் நான்கு தோல் விகளைச் சந்தித்ததால், இங்கிலாந் தின் அரையிறுதி வாய்ப்பு அநேகமாக தகர்ந்து போனது.

இந்தியாவில் 13ஆவது உலக கிண்ண தொடர் நடக்கிறது. நேற்று பெங்களூருவில் நடந்த 25ஆவது லீக் போட்டியில் இங்கிலாந்து - இலங்கை அணிகள் மோதின.

இங்கிலாந்து அணிக்கு ஆரம்பம் நன்றாக இருந்தது. மதுஷங்க ஓவரில் மலான் 3 பவுண்டரி விளாசினார். இவர் 28 ஓட்டங்கள் எடுத்தார்.

9 ஓவர்களில் இங்கிலாந்து ஒரு விக் கெட்டை மாத்திரம் இழந்து 55 ஓட்டங் களை எடுத்திருந்தது. இதற்கு பின் வந்த துடுப்பாட்ட வீரர்கள் பதறினர். இவர்களது 'பாஸ்போல்' அதிரடி ஆட் டம் சுத்தமாக எடுபடவில்லை. வரிசை யாக விக்கெட்டுகள் சிதறின. அனுபவ ஜோ ரூட் (3) ஓட்டங்களுடன் ஆட்ட மிழந்தார். பேர்ஸ்டோவ், 30 ஓட்டங் களுடன் வெளியேறினார். பெங்களூரு ஆடுகளம் 'வேகத்துக்கு' கைகொடுக்க, இங்கிலாந்தின் 'நடுத்தர வரிசையை' லகிரு குமார தகர்த்தார். இவரது பந்து வீச்சில் பட்லர் (8), லிவிங்ஸ்டன் (1) வீழ்ந்தனர். மத்யூஸ் பந்தில் மொயீன் (15) ஆட்டமிழந்தார்.

ராஜித பந்தை வோக்ஸ் அடித்தார். இதை தாழ்வாக சமரவிக்ரம பிடித்தார். 'ரீப்ளே'யில் சமரவிக்ரமவின் விரல், பந்துக்கு கீழே இருந்ததால், 'அவுட்' கொடுக்கப்பட்டது. இதற்கு அதிருப்தி தெரிவித்தவாறு வோக்ஸ்(0) நடையை கட்டினார். தனிநபராக போராடிய ஸ்ரோக்ஸ் (43), லகிரு குமார பந்துவீச்சில் ஆட்ட மிழக்க, இங்கிலாந்து அணி யின் இறுதி நம்பிக்கையும் தகர்ந்து போனது. இங்கிலாந்து அணி 33.2 ஓவர்களில் 156 ஓட்டங்களுக்கு சுருண்டது. இலங்கை சார்பில் லகிரு குமார 3, மத்யூஸ் 2 விக்கெட்டுக்களைக் கைப் பற்றினர்.

சுண்டங்காய் வெற்றியிலக்கை விரட்டிய இலங்கை அணிக்கு குசல் பெரேரா (4), குசல் மெண்டிஸ் (11) ஏமாற்றினர். பின் நிசங்க, சமரவிக்ரம அசத்தினர்.



இங்கிலாந்து பந்துவீச்சை சிதற டித்த இவர்கள், அரைச்சதம் கடந்தனர். ரஷித் பந்தை சிக்ஸருக்கு பறக்கவிட்ட நிசங்க, சுலப வெற்றியை உறுதி செய்தார்.

இலங்கை அணி 25.4 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 160 ஓட்டங்கள் எடுத்து, 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. நிசங்க (77), சமரவிக்ரம (65) ஆட்ட மிழக்காமல் இருந்தனர்.

### உலகக் கிண்ண கிரிக்கெட் - 2023 புள்ளிகள் பட்டியல்

| நிலை | அணி | போட்டி | வெற்றி | தோல்வி | புள்ளி |
|---|---|---|---|---|---|
| 1 | இந்தியா | 5 | 5 | 0 | 10 |
| 2 | தென்னாபிரிக்கா | 5 | 4 | 1 | 8 |
| 3 | நியூசிலாந்து | 5 | 4 | 1 | 8 |
| 4 | அவுஸ்திரேலியா | 5 | 3 | 2 | 6 |
| 5 | இலங்கை | 5 | 2 | 3 | 4 |
| 6 | பாகிஸ்தான் | 5 | 2 | 3 | 4 |
| 7 | ஆப்கானிஸ்தான் | 5 | 2 | 3 | 4 |
| 8 | பங்களாதேஷ் | 5 | 1 | 4 | 2 |
| 9 | இங்கிலாந்து | 5 | 1 | 4 | 2 |
| 10 | நெதர்லாந்து | 5 | 1 | 4 | 2 |


# யாழ்ப்பாணம் மாநகர சபை

இறைச்சிக் கடைகள், கருவாட்டுக்கடைகள், பல்பொருள் வாணிபக்கடைகள் (நாவாந்துறை), சந்தைகள், சிற்றுண்டிச் சாலைகள், வாகனப்பாதுகாப்பு நிலையங்கள், ஒலிபரப்புச் சேவை, ஆரியகுளம் படகோட்டல் மற்றும் நீர்விளையாட்டுகள், வாகன வரி அறவீடு என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான

## கேள்வி அறிவித்தல் - 2024 (01.01.2024 - 31.12.2024)

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி நிலையங்கள் 01.01.2024ம் திகதி முதல் 31.12.2024 ம் திகதி வரையான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

கேள்விப் படிவக் கட்டணம் - ரூபா 1,150.00 (வற் வரியுடன்)
கேள்விப் படிவம் விநியோகித்தல் - 27.10.2023 - 13.11.2023 (மு.ப 9.00 - பி.ப.3.00 மணி வரை)
கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் - 14.11.2023 மு.ப 10.00 மணி வரை
கேள்வி திறத்தல் - 14.11.2023 மு.ப 10.00 மணிக்கு

விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் நிலையத்தின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிப்பவர்கள் மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு 14.11.2023ம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கலாம்.

| இல | விபரம் | கடை இல | பிணைப்பணம் | 2024ம் ஆண்டுக்கான ஆரம்ப கேள்வித் தொகை (வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 1 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 315,000.00 |
| 2 | பண்ணை கருவாட்டுக்கடை | இல.02 | 5,000.00 | 56,100.00 |
| 3 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 195,500.00 |
| 4 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 289,500.00 |
| 5 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.05 | 5,000.00 | 195,000.00 |
| 6 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 200,000.00 |
| 7 | பண்ணை கோழியிறைச்சிக்கடை | இல.07 | 5,000.00 | 666,825.23 |
| 8 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.08 | 5,000.00 | 113,000.00 |
| 9 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000.00 | 1,686,000.00 |
| 10 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.10 | 5,000.00 | 1,055,000.00 |
| 11 | சொங்குந்தா கருவாட்டுக்கடை | இல.01 | 5,000.00 | 124,736.84 |
| 12 | சொங்குந்தா கோழியிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 345,100.00 |
| 13 | சொங்குந்தா கோழியிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 336,913.04 |
| 14 | சொங்குந்தா கோழியிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 331,000.00 |
| 15 | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல.05 | 5,000.00 | 399,495.00 |
| 16 | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 489,735.98 |
| 17 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 549,192.02 |
| 18 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 657,089.45 |
| 19 | புங்கன்குளம் ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 129,017.79 |
| 20 | புங்கன்குளம் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 955,200.00 |
| 21 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 1,875,000.00 |
| 22 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 650,000.00 |
| 23 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 595,000.00 |
| 24 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 275,100.00 |
| 25 | நாவாந்துறை கோழியிறைச்சிக்கடை | இல.10 | 5,000.00 | 353,226.52 |
| 26 | அரியாலை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 50,967.41 |
| 27 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 7,000.00 | 510,386.31 |
| 28 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 7,000.00 | 647,400.00 |
| 29 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 7,000.00 | 495,200.00 |
| 30 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 7,000.00 | 427,123.07 |
| 31 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 7,000.00 | 550,000.00 |
| 32 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 7,000.00 | 551,000.00 |
| 33 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.07 | 7,000.00 | 511,000.00 |
| 34 | குருநகர் கோழி இறைச்சிக்கடை | | 5,000.00 | 282,813.44 |
| 35 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.05 | 5,000.00 | 218,910.61 |
| 36 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.07 | 5,000.00 | 153,921.53 |
| 37 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.08 | 5,000.00 | 136,921.75 |
| 38 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.09 | 5,000.00 | 152,074.47 |
| 39 | பெரிய கடை மரக்கறிச் சந்தை | | 10,000.00 | 2,250,000.00 |
| 40 | பண்ணை மீன் சந்தை | | 10,000.00 | 7,423,100.00 |
| 41 | குருநகர் மீன் சந்தை | | 10,000.00 | 8,065,550.00 |
| 42 | செங்குந்தா சந்தை | | 10,000.00 | 5,059,534.82 |
| 43 | நாவாந்துறை மீன்சந்தை | | 10,000.00 | 667,000.00 |
| 44 | அரியாலை மீன்சந்தை | | 1,000.00 | 84,260.00 |
| 45 | பாசையூர் மீன்சந்தை | | 2,000.00 | 379,000.00 |
| 46 | புங்கன்குளம் உள்ளூர் உற்பத்தியாளர்களது அறிமுகச்சந்தை | | 2,000.00 | 6,910.06 |
| 47 | பண்ணை மீன் சந்தை சிற்றுண்டிச்சாலை | | 1,000.00 | 260,352.00 |
| 48 | யாழ். பொது நூலக சிற்றுண்டிச்சாலை | | 5,000.00 | 317,000.00 |
| 49 | துரையப்பா விளையாட்டு அரங்கத்தில் நிகழ்வுகளின் போது நடாத்தப்படும் சிற்றுண்டிச்சாலை (நாள் ஒன்றிற்கான கட்டணம்) | | 1,000.00 | 11,000.00 |
| 50 | இந்து விடுதிக்கு தெற்குப்பக்கமாகவுள்ள வாகன பாதுகாப்பு நிலையம் | | 1,000.00 | 339,999.00 |
| 51 | நீதிமன்ற துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | | 2,000.00 | 411,000.00 |
| 52 | வாகனத்தரிப்பிடக் குத்தகை | | 40,000.00 | 3,608,571.43 |
| 53 | பெரிய கடை மரக்கறிச்சந்தை வாழைப்பழக்கடை வடகிழக்கு மூலையாகவும்,சந்தையின் வைரவர் கோவிலில் வடமேற்கு மூலையாகவும் உள்ள துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் | | 5,000.00 | 250,000.00 |
| 54 | செங்குந்தா சந்தைத் தொகுதியில் மீன்சந்தைக்கு மேல்விளம்பர ஒலிபரப்பு சேவை | | 10,000.00 | 500,000.00 |
| 55 | ஆரியகுளம் படகோட்டல் சேவை | | 10,000.00 | 165,000.00 |

மேலதிக தகவல்களை மாநகரசபையின் நானாவித இறைவரிப்பகுதியுடன் (தொலைபேசி இலக்கம் 0212215978) தொடர்பு கொண்டு அல்லது அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் - பி.ப 3.00 மணி வரை நேரடியாகச் சமுகமளித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆணையாளர்,
யாழ்.மாநகர சபை

(C-7497)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை-பிரித்தானியாவுக்கு இடையில் பரஸ்பர சாரதி அனுமதிப்பத்திர பரிமாற்றம்

(லண்டன்)

பரஸ்பர சாரதி அனுமதிப் பத்திர பரிமாற்றத்தை எளிதாக்கும் முயற்சியில், பிரித்தானியாவும் இலங்கையும் தற்போது ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்கான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருவதாக இங்கிலாந்து பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தம் இரு நாடுகளுக்கும் இடையே, சாரதி அனுமதிப்பத்திரங்களை மாற்ற விரும்பும் நபர்களுக்கு ஒரு சுமுகமான செயல்முறையை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

பிரித்தானியப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட எழுத்து மூலமான வினாவுக்கு பதில் அளிக்கும்போதே, பாராளுமன்ற துணைச் செயலாளர் ரிச்சர்ட் ஹோல்டன் இதனை தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய பொருளாதாரப் பகுதிகளிலுள்ள நாடுகளில் பயன்படுத்தப்படும் சாரதி அனுமதிப்பத்திரங்களை பயன்படுத்தி பிரித்தானியாவில் வாகனங்களை செலுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அவ்வாறே, ஐரோப்பிய பொருளாதாரப் பகுதிகளிலுள்ள அனைத்து நாடுகளிலும் பிரித்தானிய சாரதி அனுமதிப் பத்திரத்தை பயன்படுத்தும் வகையில் பரஸ்பர உடன்படிக்கை அமுலில் உள்ளது.

ஐரோப்பாவுக்கு வெளியில் மேலும் 22 நாடுகளுடனும் இத்தகைய பரஸ்பர உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில், தற்போது, இலங்கை உட்பட மேலும் ஏழு நாடுகளுடன் பரஸ்பர சாரதி அனுமதிப்பத்திர பரிமாற்றத்துக்கான பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார். (நி-5-6)

# வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களால் மாதாந்தம் 500 மில்லியன் டொலர் வருமானம்

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு தெரிவிப்பு



(கொழும்பு)

வெளிநாடுகளிலுள்ள இலங்கை தொழிலாளர்களால் மாதாந்தம் 500 மில்லியன் டொலர் வருமானம் கிடைக்கின்றதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஜனாதிபதி ஊடக அமையத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்து தெரிவிக்கையில், "இந்த ஆண்டில் மாத்திரம் அரசாங்கத்துக்கு 3.5 பில்லியன் டொலர் வருமானம் வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களால் கிடைத்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து இதனை விட மிகக் குறைந்த கடன் தொகையே கிடைக்கவுள்ளது.

எவ்வாறிருப்பினும் அந்தக் கடன் தொகையைப் பெறுவதற்கான இணக்கப்பாட்டை எட்டுவதன் மூலம் இலங்கைக்கு கிடைக்கும் நம்பகத்தன்மை மிக முக்கியத்துவமுடையதாகும்.

இந்த நம்பகத்தன்மையை உருவாக்கினால் மாத்திரமே ஏனைய நாடுகளிடமிருந்து முதலீடுகளையும் ஏனைய உதவிகளையும் பெற முடியும். இதற்காக வெளிப்படை தன்மையுடன் நிதி ஒழுக்கத்தை பேண வேண்டியுள்ளது.

அத்தோடு நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களை இலாப மீட்டும் நிறுவனங்களாக மாற்றுவதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

அதன் அடிப்படையிலேயே மின்சாரம் மற்றும் நீர் கட்டணங்களில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியேற்பட்டது.

எனினும் எதிர்க்கட்சிகள் இதனை தமது அரசியல் தேவைகளுக்காக பயன்படுத்திக் கொள்கின்றன.

மறுபுறம் இஸ்ரேல் - ஹமாஸ் மோதல் உலக பொருளாதாரத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

எரிபொருளுக்கான கேள்வி அதிகரித்துள்ளமையால் அதன் விலைகளும் அதிகரிக்கக் கூடிய நிலைமை ஏற்படும். அத்தோடு மத்திய கிழக்கிலுள்ள இலங்கை தொழிலாளர்கள் தமது தொழில்களை இழக்கக் கூடிய வாய்ப்பும் உள்ளது.

அவ்வாறான தொரு நிலைமை ஏற்பட்டால் மேற்கூறியவாறு மாதாந்தம் கிடைக்கும் 500 மில்லியன் டொலர் வருமானம் வீழ்ச்சியடையும். எனவே இவ்வாறான அனைத்து நெருக்கடிகளையும் எதிர்கொள்வதற்கு அனைவரும் தயாராக வேண்டும்" எனக் குறிப்பிட்டார். (நி-5-6)

# மத்திய வங்கி ஆளுநருக்கு வாழ்த்து தெரிவித்த ஜூலி சங்

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் பணியாளர் மட்ட உடன்படிக்கையை எட்டியமைக்காக மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்கவிற்கு இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தமது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

டுவிட்டர் பதிவொன்றின் மூலம் அவர் தமது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார். சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து இரண்டாவது கடன் தவணையை பெறுவதற்கான இலங்கையின் முயற்சி இதன் மூலம் எடுத்துக் காட்டப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம் இலங்கையில் ஸ்திரத்தன்மை மற்றும் பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்து, நியாயம், வெளிப்படைத் தன்மை மற்றும் ஒருமைப்பாடு ஆகியவற்றை மதிக்கும் ஒரு பொருளாதார நிலப்பரப்பை உருவாக்குவதற்கு அமெரிக்கா உறுதியுடன் உள்ளதாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார். (நி-5-6)

# புலமைப்பரிசில் பரீட்சையின் விடைத்தாள் திருத்தும் பணிகள் நேற்று ஆரம்பம்

## பரீட்சைத் திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

அண்மையில் இடம்பெற்ற ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையின் விடைத்தாள் திருத்தும் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நாடளாவிய ரீதியில் 434 மத்திய நிலையங்களில் குறித்த விடைத்தாள் திருத்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போது, தென் மாகாணத்தில் தவணைப் பரீட்சைகள் நடைபெற்று வருகின்றன.

இதன் காரணமாக அந்த பகுதிகளில் உள்ள பரீட்சார்த்திகளின் விடைத்தாள் திருத்தப்பணிகள் இன்று முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன.

5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையின் விடைத்தாள் திருத்தப் பணிகள் எதிர்வரும் 31ஆம் திகதி வரை இடம்பெற உள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி-5-6)


# இராசிபலன்

27.10.2023
ஐப்பசி 10, வெள்ளிக்கிழமை
திரியோதசி காலை 6.19 மணிவரை
சதுர்த்தசி பின்னிரவு 4.21 மணிவரை


உத்திரட்டாதி முற்பகல் 9.28 மணிவரை
சுபநேரம் -6.03-7.33 மணிவரை
இராகுகாலம்-10.33-12.03 மணிவரை

சந்திராஷ்டமம்- பூரம்.
சித்தாமிர்தம்.


வளவன்





தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.




பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், பயணங்களால் பலனுண்டு, சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.




நீண்டநாளை பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், செய்தொழிலில் முன்னேற்றம் காணும் நாள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள்.




உள்ளம் மகிழும் சம்பவமொன்று இடம் பெறலாம், ஏட்டிக்குப் போட்டியாக இருந்தவர்கள் மனம் மாறுவர், காரிய அனுகூலமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், காரிய அனுகூலமுண்டு.





தொழில் ரீதியாக சில குழப்பங்கள் தோன்றி மறையும், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், விரயங்கள் மேலோங்கும் நாள், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.




பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.




குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், வாக்கு மேன்மையுண்டு, செல்வ நிலை உயரும்.




பெரிய மனிதர்களின் தொடர்புகள் அனுகூலம் தரும், மனநிறைவு கூடும் நாள், செய்தொழிலில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.




கேளிக்கை கொண்டாட்டங்களில் நாட்டம் காட்டுவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், எடுத்த காரியங்களில் திருப்தி காணும் நாள்.




பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சுபசெய்திகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.




வழிபாடு ஆனந்தம் தரும், மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள், பக்குவமாகப் பேசிக் காரியம் சாதிக்க வேண்டிய நாள்.

தெளிவான ஒரு குறிக்கோளை நோக்கி முயற்சி செய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத மதுபானசாலைகளால் அரச வருமானம் இழக்கப்படுகிறது

## ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் ஆளுநர்



(யாழ்ப்பாணம்)

யாழில் இயங்கும் சட்ட விரோத மதுபானசாலைகள் மற்றும் அவை குறித்த முழுமையான விபரங்களைச் சமர்ப்பிக்குமாறு வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் பணிப்புரை விடுத்துள்ளார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஒருங்கிணைப்பு குழு கூட்டத்திலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சட்டவிரோத மதுபான சாலைகள் தொடர்பில் ஏன் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை.

நீங்கள் இவ்வாறு சட்ட விரோத மதுபானசாலைகளுக்கு ஒத்துழைப்பினை வழங்குவதன் மூலம் அரசாங்கத்திற்கு வருகின்ற வருமானத்தினை இழக்க செய்கின்றீர்கள்.

எனவே அடுத்த முறை நீங்கள் கூட்டத்திற்கு வரும்போது இவ்வளவு காலத்தில் எத்தனை சட்டவிரோத மதுபான சாலைகளை கட்டுப்படுத்தி இருக்கிறீர்கள் என்ற விபரத்துடன் வரவேண்டும்" என வடமாகாண ஆளுநர் மதுவரித் திணைக்கள உத்தியோகத்தருக்கு பணிப்புரை விடுத்தார். (நி-5-6)

# அபேக்ஷாவின் தமிழ் நாடகத் திருவிழா



(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கும் டவர் மண்டப அரங்க மன்றத்தின் அபேக்ஷா தமிழ் நாடகத் திருவிழா தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நேற்று முன்தினம் ஆரம்பமாகி தொடர்ந்து மூன்று நாட்கள் இடம்பெற்ற நிலையில் இறுதிநாளாக இன்று நடைபெறவுள்ளது.

கலாசார அமைச்சின் நாடக மத்திய நிலையமாக விளங்கும் டவர் மண்டபத்தின் தமிழ்ப் பிரிவுப் பொறுப்பாளர் கலாநிதி சண்முகசர்மா ஜெயபிரகாஷ் தலைமையில் ஆரம்பமாகிய இவ்நாடகத் திருவிழாவில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துல சேன, வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மைத்திரி குணரட்ன, கலாநிதி. ஆறு.திருமுருகன், யூனியன் கல்லூரி அதிபர் வரதன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் நிரஞ்சன் உட்பட கல்வி மற்றும் கலாசார அதிகாரிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், கலைஞர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (நி-5-6-33)

## மகாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி திருக்கோவில் மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் நவம்பர் மாதம் 3 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இதனை முன்னிட்டு நவம்பர் 2 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை எண்ணெய்க்காப்பு சாத்துதல் நிகழ்வு இடம்பெறவுள்ளதுடன் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 9.13 மணிமுதல் 10.25 மணி வரையுள்ள சுபவேளையில் மஹாகும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது. (நி-5-6)

## விசேட உரையும் கலந்துரையாடலும்

(யாழ்ப்பாணம்)

தமிழ்நாடு, காந்தி கிராமம் கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறைப் பேராசிரியர் பா.ஆனந்தகுமார் "மாக்சிசமும் இலக்கியத் திறனாய்வும்" என்ற தலைப்பிலான விசேட உரையும் கலந்துரையாடலும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு கே.கே.எஸ் வீதி கொக்குவில் சந்தியில் உள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. (நி-5-6)

# தடைசெய்யப்பட்ட மீன்பிடி வலைகள் கே.கே.எஸ் பகுதியில் மீட்பு



(அராலி)

யாழ். கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பில் 140 கிலோ எடையுள்ள தடை செய்யப்பட்ட மீன் பிடிவலைகள் மீட்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள், கடற்படை அதிகாரிகளுக்கு நேற்று முன்தினம் கிடைத்த தகவலின் பிரகாரம் யாழ். காங்கேசன்துறை வீதியிலுள்ள கடை ஒன்றில் சோதனையிட்டபோது தடை செய்யப்பட்ட 140 கிலோ எடையுள்ள வலையுடன், கடையின் உரிமையாளர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

இதுதொடர்பில் மேலதிக விசாரணைகளை கடற்றொழில் பரிசோதகர்கள் மேற்கொண்டு வருகின்றனர். (நி-5-6-33-104)

# பெண்ணின் சங்கிலி அறுப்பு

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொயிலாமனை பகுதியில் திருட்டு மோட்டார் சைக்கிளில் வந்து நகை அறுத்தவர்கள் மோட்டார் சைக்கிளை கைவிட்டு விட்டு தப்பித்துச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

சுன்னாகம் பகுதியில் திருடிய வெகோ ரக மோட்டார் சைக்கிளில் நேற்று வியாழக்கிழமை கொடிகாமம் வந்த இருவர் கொடிகாமம் கொயிலாமனை பகுதியில் பெண் ஒருவரின் சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பிக்க முற்பட்ட வேளையில் பொதுமக்கள் விரட்டியதால் மோட்டார் சைக்கிளை கைவிட்டு விட்டு தப்பித்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் மோட்டார் சைக்கிளை மீட்ட பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-5-6-30)

# கல்லுண்டாய் மக்களுக்கான காணிப்பத்திரம் வழங்கி வைப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கல்லுண்டாய்வெளி குடியிருப்புத்திட்ட மக்களுக்கான காணி உரிமைப்பத்திரம் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

யாழ்.கல்லுண்டாய் வெளியில் அமைந்துள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அலுவலகத்தில் நவாலி கிழக்கு மற்றும் மேற்கு கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த 54 குடும்பங்களுக்கான காணி உரிமைப் பத்திரம் யாழ். கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தவால் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சிவபாலசுந்தரன், காணி மேலதிக அரசாங்க அதிபர் ஸ்ரீமோகன், மானிப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெயந்தன் குணதிலாக மற்றும் துறைசார் அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (நி-5-6-33-104)

# பயிர்நிலங்களை சேதம் விளைவிக்கும் கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்துங்கள்

## விவசாயிகள் கோரிக்கை

(கரணவாய்)

வயல்நிலங்களுக்குள் புகுந்து பயிர்களை சேதம் விளைவிக்கும் கட்டாக்காலிகால் நடைகளை கட்டுப்படுத்துமாறு விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

கரவாய் உப்புறோட் வீதிகளில் நடமாடும் கட்டாக்காலி கால்நடைகள் அருகில் உள்ள வயல்நிலங்களுக்குள் சென்று பயிர்களை சேதமாக்குகின்றன.

இம்முறை வயல் காணிகளில் நெல் விதைப் பினை விவசாயிகள் மேற்கொண்ட நிலையில் இவ்வாறான செயற்பாடுகளால் தாம் வருத்தம் அடைவதாக விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

எனவே வயல் நிலங்களுக்குள் இறங்கி சேதம் விளைவிக்கும் கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்த கரவெட்டி கமநல திணைக்களம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-5-6-60)




தேசிய லொத்தர் சபையின் 60 ஆவது ஆண்டினை முன்னிட்டு புதிய லொத்தர்களான "Mega Millions" மற்றும் "Mega 60" சந்தைக்கு விநியோகித்தல் மற்றும் சுப்பர் பரிசு வெற்றியாளர்களுக்கு காசோலைகளை வழங்கும் நிகழ்வு கடந்த 10 ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிக விலைக்கு அரிசி விற்பனை; கண்டறிய சுற்றிவளைப்புகள்

## வர்த்தக அமைச்சர் நடவடிக்கை



(கொழும்பு)

நிர்ணய விலைக்கு அதிகமாக அரிசி விற்பனை செய்யப்படும் பட்சத்தில், அரிசியை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று முன்தினம் அமைச்சரவை உபகுழு கூடிய போது, இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

சம்பா உள்ளிட்ட பல அரிசி வகைகள் இவ்வாறு நிர்ணய விலைக்கு அதிகமாக விற்பனை செய்யப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளது.

சம்பா அரிசி 230 ரூபாவிற்கும் நாட்டரிசி 220 ரூபா விற்கும் கீரிச்சம்பா 260 ரூபா விற்கும் விற்பனை செய்யப்பட வேண்டுமென நிர்ணய விலை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்யும் வர்த்தகர்களை கண்டறியும் நோக்கில் சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக அமைச்சர் நளின் பெர்னாண்டோ மேலும் தெரிவித்துள்ளார். (நி-5-6)

# அடையாள அட்டைக்கான கட்டணத்தில் திருத்தம்

(கொழும்பு)

தேசிய அடையாள அட்டை வழங்குவதற்கு அறவிடப்படும் கட்டணத்தில் திருத்தம் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் பொதுபாதுகாப்பு அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது.

தேசிய அடையாள அட்டையின் சான்றளிக்கப்பட்ட பிரதிக்கான கட்டணம் 2,000 ரூபாவாக இருக்க வேண்டும் என இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், தேசிய அடையாள அட்டைகளின் உண்மைத் தன்மையை சரிபார்ப்பதற்கான கட்டணம் ஒன்லைன் முறையில் சமர்ப்பித்தால் 25 ரூபாவாகவும் பௌதீக ஆவணங்கள் மூலமாகவோ அல்லது ஆணையர் ஜெனரலுக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய மின்னணு முறை மூலமாகவோ சமர்ப்பிக்கப்பட்டால் 500 ரூபாவாகவும் இருக்கும்.

மேலும், தேசிய அடையாள அட்டை புகைப்படக்கலைஞராக பதிவு செய்வதற்கான கட்டணம் 15,000 ரூபாவாக இருக்க வேண்டும் என பொது பாதுகாப்பு அமைச்சு கூறுகிறது.

இதற்கு முன், 10,000 ரூபாய் கட்டணம் இருந்த நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

பதிவுச் சான்றிதழைப் புதுப்பிப்பதற்கான ஆண்டுக் கட்டணமான 2,000 ரூபாவை 3,000 ரூபாவாக உயர்த்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

### கடமை நேரங்களில்

# கையடக்கத் தொலைபேசி பயன்படுத்தத் தடை

## குற்றப்புலனாய்வு திணைக்களம் அதிரடி அறிவிப்பு

(கொழும்பு)

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் பல பிரிவுகளில் கடமையாற்றுபவர்களின் கையடக்கத் தொலைபேசிகள் கடமை நேரங்களில் பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளதோடு அவை பொறுப்பதிகாரிகளினால் கைப்பற்றப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளின் விசாரணைகள் தொடர்பான உள்ளக தகவல்கள் அனுமதியின்றி வெளியிடப்படுவதை தடுப்பதற்காக இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உத்தியோகபூர்வமாக உள்ளக தகவல்கள் வெளிப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபடும் அதிகாரிகளுக்கு இந்த தடை விதிக்கப்படாது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கீழ் 40 பிரிவுகள் இயங்குகின்ற நிலையில் அனைத்து பிரிவிலும் கடமையாற்றுபவர்களிடம் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (நி-5-6)

# சாரதிகளின் கவனக்குறைவினால் 115 சிறுவர்கள் விபத்துக்களில் பலி

(கொழும்பு)

இந்த ஆண்டில் இதுவரை சுமார் 115 சிறுவர்கள் வீதி விபத்துகளில் உயிரிழந்துள்ளதாக போக்குவரத்து பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வருடம் ஜனவரி முதலாம் திகதி முதல் ஒக்டோபர் 15ஆம் திகதி வரையில் இந்த மரணங்கள் பதிவாகியுள்ளதாக போக்குவரத்துப் பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மனோஜ் ரணகல தெரிவித்தார்.

சாரதிகள் கவனக்குறைவாக வாகனம் செலுத்துவதே இந்த உயிரிழப்புகளுக்கு காரணம் என கொழும்பில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பில் அவர் தெரிவித்தார். (நி-5-6)

# கடலுக்கடியில் ஆராய்ச்சியில் ஈடுபட சீனக் கப்பலுக்கு அனுமதியில்லை-நாரா

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள சீனாவின் ஆராய்ச்சிக் கப்பல் கடலுக்கடியில் ஆராய்ச்சிகளில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என நாரா அமைப்பு தெரிவித்துள்ளது.

சீனாவின் சி யாங் 6 கப்பலுடன் இணைந்து ஆராய்ச்சிகளில் ஈடுபடுவதற்காக வெளிவிவகார அமைச்சின் அனுமதிக்காக காத்திருக்கும் நாரா அமைப்பு இந்திய பெருங்கடலில் நீர்நிலையை மையமாக கொண்டு வான் கடல் ஆராய்ச்சிக்கு இணங்கியுள்ளதாக தெரிவித்துள்ளது.

எனினும் பாதுகாப்பு விடயங்கள் குறித்து காணப்படும் உணர்வுகள் காரணமாக கடலுக்கு அடியில் ஆராய்ச்சியில் ஈடுபட அனுமதி வழங்கப்படவில்லை எனவும் நாரா அமைப்பு தெரிவித்துள்ளது.

கடலில் வெப்பநிலையும் குளிர்ச்சியும் காலநிலையை எவ்வாறு பாதிக்கின்றது என்பதை கண்டறிவதற்காகவே இவ்வாறான ஆராய்ச்சிகள் இடம்பெறுகின்றது என தெரிவித்துள்ள நாரா அமைப்பின் தலைமை விஞ்ஞானி அருளானந்தன், இதன் மூலம் எதிர்காலத்தில் வறட்சி மற்றும் மழை குறித்து ஒரு மாதத்திற்கு முன்னதாகவே அறிய முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

இது எங்கள் விவசாய துறைக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும் என தெரிவித்துள்ள அவர் விவசாயிகள் காலநிலை குறித்து முன்கூட்டியே அறியமுடியும்.

உலகில் குறைந்தளவு ஆராயப்பட்ட பகுதி இந்து சமுத்திரம் எனவும் குறிப்பிட்டுள்ள அவர், நாங்கள் கூட்டு ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளோம். இதன் காரணமாக எங்கள் விஞ்ஞானிகள் கப்பலில் ஏறி ஆராய்ச்சியில் ஈடுபடுவார்கள்.

நாங்கள் எவரும் தரவுகளை எடுத்துக்கொண்டு செல்வதற்கு அனுமதிக்கப்போவதில்லை நாங்களே அதனை வைத்துக்கொள்வோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-5-6)

# சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பு

(கொழும்பு)

இந்த மாதத்தின் முதல் மூன்று வாரங்களில் 77 ஆயிரத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இந்த மாதம் 77 ஆயிரத்து 763 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர். இந்தியாவில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை தற்போது அதிகரித்து வருவதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (நி-5-6)

### பாடசாலை சேவைக்கான பேருந்துகள்

# மோசமான நிலையில் காணப்பட்டால் கடும் நடவடிக்கை-பொலிஸ் அத்தியட்சகர்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் பழுதடைந்த பேருந்துகள் மற்றும் வான்கள் மீது கடும் நடவடிக்கை எடுக் கப்படும் என சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மனோஜ் ரணகல தெரிவித்துள்ளார்.

போக்குவரத்துப் பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மனோஜ் ரணகல நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரி விக்கையில்,

" பொலிஸ் துணைக்கண் காணிப்பாளர்களிடம் ஆய்வு செய்த போது, பயணிகள் போக்குவரத்துப் பேருந்துகள் போக்குவரத்தில் இருந்து நீக்க ப்பட்ட பிறகு, அது பாடசாலை சேவையாக மாற்றப்படுகிறது.

அதேவேளை, வான்களின் பராமரிப்பும் மிகவும் மோசமாக உள்ளது. இது குறித்து கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.


# கண்ணீர் அஞ்சலி



எமது நிலையத்தின் செயற்பாட்டுக்கு உறுதுணையாக இருப்பவரும் நிலையத்தின் மூத்த உறுப்பினரான அருணாச்சலம் அருணகுமார் அவர்களின் அன்புத் தம்பி

அருணாச்சலம் இராஜ்குமார்

அவர்கள் கனடாவில் திடீர் மறைவையொட்டி அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போம்

(C-7495)

கொக்குவில் மத்திய சனசமூக நிலையமும் விளையாட்டுக்கழகமும் (K.C.C.C &K.C.C.C.S.C)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 210

### தமிழர்களின் மனித நேயத்தால் நெகிழ்ந்த சிங்களவரின் பதிவு



மூதூர் பிரதேசத்தில் வாகன விபத்தில் சிக்கிய சிங்களவர்கள் இருவர் தமிழர்கள் செய்த உதவியால் நெகிழ்ச்சியடைந்த சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது. சம்பவத்திற்கு முகங்கொடுத்த சிங்களவர். "தமிழர்களின் மனித நேயம்" என்ற தலைப்பில் பதிவொன்றை பதிவிட்டிருந்தார்.

அந்தப் பதிவில், "கடந்த வாரம் மூதூர் பகுதியில் கார் ஒன்று விபத்துக்குள்ளானது. மூத்த மகனும் நானும் மட்டுமே அதில் பயணித்தோம். இரவு வெகுநேரமாகிவிட்டது. மழையும் பெய்தது. வீதியின் இருபுறமும் உள்ள வனப்பகுதியில் யானைகள் உள்ளன. வாகனம் சேதமடைந்து அசையாமல் நின்றுவிட்டது.

நாங்கள் மிகவும் நெருக்கடியான சூழலுக்கு தள்ளப்பட்டோம். காப்புறுதி நிறுவன அதிகாரிகள் அவ்விடத்திற்கு வருவதற்கு ஒரு மணி நேரத்திற்கு மேல் ஆகும் என்றார்கள். இப்போது தான் மன வேதனை அதிகரித்தது. அப்போது அந்த வழியே ஒரு தமிழர் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தார். உண்மையில் அவரையே மனிதன் என கூறலாம். அவரது உதவி எங்களுக்கு மிகப்பெரிய ஆச்சரியமாக இருந்தது. அன்று இரவு, அந்த நபர் தனது மகனை அழைத்து எங்கள் பாது காப்பிற்காக அவ்விடத்தில் விட்டுவிட்டு அவர் 70 மைல்கள் சென்று. வாகனத்திற்கு என்ன நடந்தது என்பதைச் சரிபார்க்க ஒரு நபரை கண்டுபிடித்து அழைத்து வந்தார்.

வாகனத்தை இழுக்க டிராக்டர் ஒன்றையும் கண்டுபிடித்தார். மூடியிருந்த கடை ஒன்றை திறக்க வைத்து கயிறு ஒன்றையும் எடுத்து வந்தார். அவ்வழியாகச் சென்ற சுமார் 25 தமிழ் இளைஞர்களும் எங்கள் பாதுகாப்பிற்காக வந்தார்கள். சில இளைஞர்களுக்கு சிங்களம் கூட தெரியாது. ஆனால் அவர்கள் உதவ தயாராக இருந்தனர். ஏழெட்டு கிலோமீற்றர் காரை இழுத்து வந்த தமிழ் இளைஞர்கள் பணம் வேண்டாம் என கூறிவிட்டார்கள். அன்று இரவு சுமார் மூன்று மணி நேரம் அந்த மக்கள் எங்களுக்காக தியாகம் செய்தனர்.

அதுதான் மனதாபிமானம். அது தான் தமிழ் மக்களின் மனித நேயம். தமிழ் மக்கள் மீது என் இதயம் முழுவதும் நிறைந்து விட்டது. எனக்கு உதவிசெய்த பிரபா, மனிதாபிமானம் நிறைந்த மனிதன்" என பதிவிட்டிருந்தார்.

## கனடாவில் மின்னல் தாக்குதலுக்கு உள்ளான ஹெலிகொப்டர்

### பயணிகளின் திக் திக் நிமிடங்கள்




(ஒட்டாவா)

கனடாவில் பயணிகள் ஹெலிகொப்டர் ஒன்று மின்னல் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது.

வான்கூவாரிற்கும் விக்டோரியாவிற்கும் இடையில் அடிக்கடி பயணம் செய்யும் இந்த ஹெலிகொப்டர் திடீரென மின்னல் தாக்குதலுக்கு இலக்காகி அதன் அனைத்து இலத்திரனியல் கருவிகளும் செயலிழந்ததால் உயரே பறந்த ஹெலிகொப்டர் சுற்றுச்சுழன்று கீழே விழ தொடங்கியதாக பயணிகள் தெரிவித்துள்ளனர்.

நிச்சயமாக இது தமது வாழ்க்கையின் இறுதி தருணம் என கருதிய பயணிகள் ஓலமிட்டதாகவும் மேலும் சில பயணிகள் அருகில் இருந்தவர்களின் கைகளை இறுகப் பற்றி கண்ணீர் மல்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு விமானிகள் மற்றும் 12 பயணிகளுடன் இந்த ஹெலிகொப்டர் பயணம் செய்துள்ளது.

திடீரென ஏற்பட்ட மின்னல் தாக்குதல் காரணமாக ஹெலிகொப்டர் கடல் மட்டத்திலிருந்து சுமார் 4200 அடி உயரத்திலிருந்து கீழே விழ தொடங்கியதாகவும் மேக மூட்டத்தில் இருந்து கீழே இறங்கிய போது விமானிகளின் அபார ஆற்றல் காரணமாக விமானம் பாதுகாப்பாக தரையிறக்கப்பட்டது என தெரிவிக்கப்படுகிறது.

Sikorsky S-76 ரக ஹெலிகொப்டர் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்த விமானத்தில் பயணம் செய்த இரண்டு விமானிகளும் 12 பயணிகளும் எவ்வித ஆபத்தும் இன்றி தரையிறங்கியதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-5-6)

## பிரிட்டனி...

## கண்டன...

(லண்டன்) —

ஹமாஸுக்கு ...

பெஞ்சமின் நெத...

எதிர்ப்பு தெரிவித்...

கார்டிப் உள்ளி...

செவ்வாய்க்கிழ...

தெரிவித்துள்ளா...



## மர்மநபரின் துப்பாக்கிச் சூட்டில் 22 பேர் பலி, 60 பேர் காயம்

### அமெரிக்காவில் பயங்கரம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் மர்ம நபரொருவர் நடத்திய துப்பா க்கிச் சூட்டில் சுமார் 22 பேர் வரை உயிரிழந்திருக்க லாம் எனத் தெரிவிக்கப் படுகின்றது.



மைன் நகரில் உள்ள லெவிஸ்டன் பகுதியிலேயே நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. மேலும் இத்துப்பாக்கிச் சூட்டில் 60 இற்கும் மேற்பட் டோர் காயமடைந்துள்ள னர்எனவும் அவர்களில் பலரது நிலைமை கவலைக் கிடமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இது குறித்த விசாரணைகளைப் பொலிஸார் தீவிரமாக முன் னெடுத்து வருகின்றனர். (நி-5-6)

## கதிர்...

## அணு...

(டோக்கியோ...)

ஜப்பானி...

வாலையில்...

ஊழியர்கள்...

தெறித்து பாதி...

என அணு...

TEPCO நிறு...

அணுவா...

நீரைச் சுத்தி...

குழாய்களை...

செய்து கொண...

அப்போது...

குழாயிலிருந்...

வெளியேறிய...

## காசாவில் முடக்கப்பட்ட சுகாதார சேவைகள் 344 குழந்தைகள் உட்பட 756 பேர் உயிரிழப்பு

(காசா)

காசா மீதான இஸ்ரேலிய வான்வழித் தாக்குதல்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.


இந்த நிலையில் அந்த நகரில் சுகாதார சேவைகள் முற்றிலும் முடங்கிப் போயுள்ளது என பாலஸ்தீனிய சுகாதார அமைச்சகம் தெரி...

இதுதொடர்பில் பாலஸ்தீனிய சுகாதார அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் ஒருவர் கருத்து தெரிவிக்கையில்,

"அடுத்தடுத்த தாக்குதல்களால் மருத்துவ பணியாளர்கள் பற்றாக்குறை மற்றும் மருந்துகள் பற்றாக்குறை காரணமாக காசா ... மருத்துவச் சேவைகள் முடக்கப்பட்டுள்ளது.

இதனால் ஒருநாளில் மட்டும் 344 குழந்தைகள் உட்பட 756 பேர் உயிரிழந்துள்ளனர்.

அவசர உதவிகளைக் கோரி வருகிறோம். ஆனால், சர்வதேச நாடுகள் எங்கள் கோரிக்கையை கண்டு கொள்ளவில்லை" என்று தெரிவித்துள்ளார். (நி-5-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...டனில் ஒலித்த ஜிகாத் கோஷங்கள்

# ...னம் தெரிவித்த பிரதமர் ரிஷி சுனக்

...ன்)

**...ஸ்க்கு எதிரான மோதலில் இஸ்ரேல் வெற்றி பெற வேண்டும் என பிரதமர் ரிஷி சுனக், ...ன் நெதன்யாகுவிடம் அண்மையில் தெரிவித்தார். இதனையடுத்து இஸ்ரேல் தாக்குதலுக்கு ... தெரிவித்தும் பாலஸ்தீனத்துக்கு ஆதரவாகவும் பிரிட்டனின் பெல்பாஸ்ட், பிர்மிங்காம், ... உள்ளிட்ட நகரங்களில் ஜிகாத் தொடர்பான கோஷங்கள் எழுப்பி பேரணி கடந்த ...ய்க்கிழமை இடம் பெற்றது. குறித்த பேரணிக்கு பிரதமர் ரிஷி சுனக் கண்டனம் ...துள்ளார்.**



காசா நகரில் உள்ள அல்-அஹ்லி மருத்துவ மனை மீது கடந்த செவ்வாய்க்கிழமை நிகழ்த்தப்பட்ட தாக்குதலில் சுமார் 500 பேர் உயிரிழந்த சம்பவம் உலக அளவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

அதோடு இஸ்ரேல் - ஹமாஸ் போரில் அப்பாவி பொதுமக்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் என 7000 இற்கும் அதிகமானோர் பலியாகியுள்ளனர்.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையே தொடர்ந்து மூன்று வாரங்களுக்கு மேலாக போர் நடை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)



## கதிரியக்கத் திரவம் தெறித்து அணுவாலையில் ஐவர் பாதிப்பு

(டோக்கியோ)

ஜப்பானின் ஃபுக்குஷிமா அணுவாலையில் நேர்ந்த விபத்தில் 5 ஊழியர்கள் மேல் கதிரியக்கத் திரவம் தெறித்து பாதிப்பிற்கு ஆளாகியுள்ளனர் என அணுவாலையை நிர்வகிக்கும் TEPCO நிறுவனம் தெரிவித்தது.

அணுவாலையில் சேரும் கழிவு நீரைச் சுத்திகரித்து வந்த பழைய குழாய்களை ஊழியர்கள் சுத்தம் செய்து கொண்டிருந்தனர்.

அப்போது எதிர்பாராவிதமாக ஒரு குழாயிலிருந்து கதிரியக்கத் திரவம் வெளியேறியது.

100 மில்லிலீற்றர் அளவிலான திரவம் ஊழியர்களின் தோல் மீது தெறித்ததாக TEPCO நிறுவனம் குறிப்பிட்டது.

கதிரியக்கத்தை அகற்றும் சிகிச்சைக்காக 2 ஊழியர்கள் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஃபுக்குஷிமா அணுவாலையில் மொத்தம் 1.3 பில்லியன் தொன் கதிரியக்கக் கழிவுநீர் உள்ளது. ஒகஸ்ட் மாத இறுதியில் இருந்து அதைக் கட்டங்கட்டமாகக் கடலில் கலக்கும் நடவடிக்கையை ஜப்பான் தொடங்கி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)



## கனடாவில் விசா சேவையை மீண்டும் ஆரம்பித்தது இந்தியா

(டில்லி)

அண்மைக் காலமாக இந்தியாவுக்கும் கனடாவுக்கும் இடையே மோதல் போக்கு நிலவி வருகின்ற நிலையில் கனடாவில் விசா சேவையை இந்தியா மீண்டும் தொடங்கியுள்ளது.




கனடாவில் சீக்கிய மதத் தலைவர் ஹர்தீப் சிங் நிஜார் கடந்த ஜூன் மாதம் சுட்டுக் கொல்லப்பட்டார். இச்சம்பவத்தில் இந்தியாவுக்கு தொடர்பு இருப்பதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றஞ்சாட்டியிருந்தார்.

குறித்த குற்றச்சாட்டை இந்தியா திட்டவட்டமாக மறுத்தது. இதைத் தொடர்ந்து இரண்டு நாடுகளுக்கும் இடையே மோதல் அதிகரித்த நிலையில் கனடாவில் உள்ள இந்திய தூதரை வெளியேற ஜஸ்டின் ட்ரூடோ உத்தரவிட்டார்.

இதற்குப் பதிலடியாக இந்தியாவும் செயற்பட்டு வரும் தங்கள் நாட்டு தூதரக அதிகாரிகளின் எண்ணிக்கையை குறைக்கும்படி கனடாவுக்கு மத்திய அரசு எச்சரித்தது.

இதைத்தொடர்ந்து இந்தியாவில் பணியாற்றி வரும் தூதரக அதிகாரிகளின் எண்ணிக்கையை கனடா குறைத்தது.

இவ்வாறான நிலையில், கடந்த மாதம் 21 ஆம் திகதி கனடாவிலிருந்து இந்தியா வருபவர்களுக்கான விசா சேவையை இந்தியா நிறுத்தியது.

இந்த நிலையில், கனடாவில் விசா சேவையை இந்தியா மீண்டும் தொடங்கியுள்ளது.

இதன்மூலம் கனடாவில் இருந்து தொழில், மருத்துவம் உள்ளிட்ட காரணங்களுக்காக பயணிகள் இந்தியாவுக்கு வர முடியும்.

விசா சேவை தொடங்கியுள்ளதால் கனடாவில் இருந்து இந்தியா வரும் பயணிகள் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்கவாத நோயினால் பாதிக்கப்படுவோர்

# இலங்கையில் அதிகரிப்பு

## மருத்துவர் ஹர்ஷ அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

**நாட்டில் தற்போது பக்கவாதத்திற்கு உள்ளாகுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக மருத்துவர் ஹர்ஷ குணசேகர தெரிவித்துள்ளார்.**

நாட்டில் 25 வயதுக்கு மேற்பட்டவர்களில் நான்கில் ஒருவருக்கு பக்கவாதம் ஏற்படுவதற்கான வாய்ப்பு காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒருவர் உரையாடும் போது வார்த்தை பிரயோகங்களில் ஏற்படும் தடுமாற்றம் மற்றும் முகத்தின் ஒரு பக்கம் இழுப்பது போன்றன பக்கவாதத்துக்கான அறிகுறிகள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலகளாவிய ரீதியில் 6.5 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் பக்கவாதம் காரணமாக உயிரிழக்கின்றனர். அவர்களில் 51 சதவீதமானோர் ஆண்களாவர்.

இலங்கையில் இரண்டு இலட்சம் பேர் பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக மருத்துவர் ஹர்ஷ சுட்டிக்காட்டினார். (நி-5-6)

# சட்டத்தரணிகளுக்கு அச்சுறுத்தல்

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கவலை

(கொழும்பு)

தமது கடமைகளை நிறைவேற்றும் போது சட்டத்தரணிகளுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுவது குறித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கடும் கவலை வெளியிட்டுள்ளது.

உயிருக்கு அஞ்சாமல் தமது தொழில்சார் கடமைகளை நிறைவேற்றும் சுதந்திரம் சட்டத்தரணிகளுக்கு இருக்க வேண்டும் என அதன் தலைவர் கௌசல்ய நவரத்ன தெரிவித்துள்ளார்.

கடந்த 17 ஆம் திகதி கலகெதர நீதிவான் நீதிமன்றில் சந்தேகநபர் ஒருவரால் பெண் சட்டத்தரணி ஒருவர் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்தைத் தொடர்ந்து இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வழக்கு, விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, பல சட்டத்தரணிகள் ஆஜராகி குறித்த பெண் சட்டத்தரணிக்கு நீதி வழங்கப்படுவதை உறுதிப்படுத்த உதவியதாக அவர் குறிப்பிட்டார்.

சட்டத்தரணிகள் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது இன்றியமையாத ஒன்று என்றும் நீதிமன்றத்தின் கண்ணியம் மற்றும் அதிகாரமும் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் கௌசல்ய நவரத்ன தெரிவித்துள்ளார். (நி-5-6)

# சந்தைகளில் நேற்றைய விலை


| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 200 | 280 | 320 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 300 | 300 |
| தக்காளி | 250 | 200 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 120 | 160 | 150 |
| கோவா | 250 | 180 | 200 | 250 |
| கரட் | 250 | 300 | 320 | 400 |
| பூசணி | 80 | 70 | 80 | 80 |
| புடோல் | 180 | 240 | 160 | 250 |
| வாழைக்காய் | 200 | 180 | 200 | 300 |
| சின்ன வெங்காயம் | 350 | 320 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 300 | 240 | 270 | 320 |
| பாகற்காய் | 400 | 400 | 400 | 400 |
| வெண்டைக்காய் | 120 | 250 | 200 | 350 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 120 | 150 |
| பயற்றங்காய் | 450 | 350 | 320 | 400 |
| லீக்ஸ் | 200 | 160 | 180 | 200 |
| பீற்றூட் | 100 | 120 | 150 | 200 |
| கறிமிளகாய் | 350 | 300 | 500 | 400 |
| முருங்கைக்காய் | 250 | 250 | 250 | 300 |
| போஞ்சி | 400 | 550 | 500 | 600 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | 280 | 300 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 80 | 120 |
| தேசிக்காய் | 1200 | 1200 | 1400 | 2000 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60-90 | 60-90 |
| இராசவள்ளி | 400 | 500 | 500 | 500 |
| வெங்காயப்பூ | 350 | 350 | — | 400 |
| முள்ளங்கி | 100 | 120 | — | 200 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 80 | 60 |
| வல்லாரை | 40 | 30 | 50 | 60 |
| ஈரப்பலா | 100 | 150 | — | 180 |

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2950

மணிகண்டன்




தஸ்வின்




நிமாலி




றொபின்சன்




வினிற்றா




கஜி




**நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேய்ச்சல் தரைவையை விடுவிக்ககோரி மன்னாரில் கவனயீர்ப்பு போராட்டம்




(மன்னார்)

**நானாட்டான் - முசலி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினால் கட்டுக்கரைக்குளத்திற்குட்பட்ட புல்லறுத்தான் கண்டல் மேய்ச்சல் தரை காணியை விடுவிக்கக்கோரி கவனயீர்ப்பு போராட்டம் நேற்று மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன் முன்னெடுக்கப்பட்டது.**

பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் பயனற்று போனதன் காரணத்தால் குறித்த போராட்டம் மன்னார் மாவட்ட செயலகத்திற்கு முன்பாக இடம் பெற்றது.

ஒவ்வொரு வருடமும் மாந்தை மேற்கு, இலுப்பை கடவை பகுதிக்கு தமது கால் நடைகளை கொண்டு சென்று பல்வேறு இன்னல்களை சந்திப்பதாக தெரிவித்தனர்.

அத்துடன் எமது கட்டுக்கரைக் குளத்திற்குட்பட்ட புல்லறுத்தான் கண்டல் பகுதியை மேய்ச்சல் நிலமாக பிரகடனப்படுத்த வேண்டும் என பல வருடமாக கோரிக்கை விடுத்தும் மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்ட போதும் நடைமுறைச் சாத்தியமாக்கவில்லை என விசனம் தெரிவித்துள்ளனர்.

எனவே உடனடியாக எமக்குரிய மேய்ச்சல் நிலத்தை விடுவித்து தருமாறு கோரிக்கை விடுத்ததோடு, மாவட்ட செயலகத்தின் பிரதம கணக்காளரிடம் மகஜர் வாசித்து கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-285)

# ஆபத்தான மரம் அகற்றப்பட்டது



(முறிகண்டி)

வட்டக்கச்சி பிரதான வீதியில் போக்குவரத்திற்கு ஆபத்தை ஏற்படுத்தும் வகையிலும் மின் வடங்களுக்கு சேதம் விளைவிக்கும் வகையிலும் இருந்த மரம் நேற்று அகற்றப்பட்டுள்ளது.

குறித்த வீதி ஊடாக முல்லை மாவட்டத்திற்கான பிரதான மின் விநியோகம் மற்றும் அதிகமாக மக்கள் பயன்படுத்தும் வீதியில் ஆபத்தை விளைவிக்க கூடிய வகையில் இருந்த மரத்தினை அகற்றுமாறு மக்கள் விடுத்தகோரிக்கைக்கு இணங்க மின்சார சபை ஊழியர்கள், இடர் முகாமைத்துவப் பிரிவினர் மற்றும் கரைச்சி பிரதேச சபையினர் இணைந்து குறித்த மரத்தினை அகற்றியுள்ளனர்.

கிளிநொச்சி நகரில் மேலும் ஆபத்தை விளைவிக்க கூடிய 29 மரங்கள் மற்றும் அதன் கிளைகளை அகற்றுவதற்காக அடையாளப்படுத்தப்பட்டு அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளதாக அரசாங்க மரக்கூட்டுத்தாபனத்தினர் தெரிவித்தனர். (நி-5-6-100-316)

## அம்பாள்புரத்தில்

# 25 பேருக்கு காணி அனுமதி பத்திரம் வழங்கி வைப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு அம்பாள்புரம் கிராம அலுவலர் பிரிவில் 25 பேருக்கான காணி அனுமதிப்பத்திரங்கள் நேற்று வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

முல்லை மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேசத்தில் மக்களுக்கு உரிய காணி ஆவணங்களை வழங்குகின்ற செயற்பாடுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையிலே மாந்தை கிழக்குப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அம்பாள்புரம் கிராம அலுவலர் பிரிவில் நீண்டகாலங்களாக காணி ஆவணங்கள் இன்றி வாழ்ந்த குடும்பங்களுக்கான காணி ஆவணங்கள், மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் செல்வி ரஞ்சனா நவரத்தினத்தால் அம்பாள்புரம் பொது நோக்கு மண்டபத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இதில் காணி அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், கிராம வட்ட அமைப்புகளின் தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (நி-5-6-315)

# முல்லை கொலை வழக்கு கணவனுக்கு விளக்கமறியல்

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு நீராவிபிட்டி கிழக்கு கிராமத்தில் இளம் பெண் ஒருவரை கொலை செய்து புதைத்த குற்றச்சாட்டின் பெயரில் கைது செய்யப்பட்ட கணவனை விளக்கமறியலில் வைக்க முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றினால் உத்தரவிடப்பட்டுள்ளது.

குறித்த பெண்ணின் தாயாரால் முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கமைய குறித்த இளம் குடும்ப பெண் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டுள்ளமை தெரியவந்ததையடுத்து கொழும்பு பகுதியில் வைத்து கணவனை முள்ளியவளை பொலிஸார் கைது செய்தனர்.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட கணவனை நேற்று முன்தினம் முல்லை மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோது அந்நபரை எதிர்வரும் 8.11.2023 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்று உத்தரவிட்டுள்ளது. சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை முள்ளியவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றார்கள். (நி-5-6-299)


# பெறுகை அறிவித்தல்
# பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை

தலைவர் பெறுகைக்குழு பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை அவர்களினால் 01.12.2023ஆம் திகதி தொடக்கம் 31.05.2024 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் கீழ்வரும் சேவைகளை வழங்குவதற்கு தகைமையுள்ள சேவை வழங்குநரிடமிருந்து பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| பெறுகை இலக்கம் | சேவை | ஆளணி எண்ணிக்கை | பெறுகை பிணை வைப்பு(ரூபா) | |
|---|---|---|---|---|
| | | | தொகை | காலம் |
| NP/14/45(3)/1/OS/2023/02 | சுகாதாரச் சேவை | 04 | 6,000.00 | 26.01.2024 |

1. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கமைவாகவே இக்கேள்வி கோரப்படுகின்றது.
2. தனியார் சேவை வழங்குநர்கள் சேவை வழங்கலுக்கான வியாபாரப் பதிவுடைய ஒரு நபராகவோ அல்லது ஒரு நிறுவனமாகவோ இருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தது 02 ஆண்டுகள் இச்சேவையை வழங்கியதற்கான அனுபவம் இருத்தல் வேண்டும்.
3. சேவை வழங்குநர்களின் தலைமைக்காரியாலயம் அல்லது கிளைக் காரியாலயம் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் அமைந்திருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள பெறுகைதாரர்கள் தலைவர், பெறுகைக்குழு பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை, தொலைபேசி இலக்கம் 024 324 3544 தொலைநகல் 021 205 0036 மின்னஞ்சல் pallaips@gmail.com இல் இருந்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் அலுவலக நாட்களில் 27.10.2023 தொடக்கம் 09.11.2023 ஆம் திகதி மு.ப 09.00 முதல் 15.00 மணிவரை பெறுகை ஆவணங்களைப் பார்வையிடலாம்.
5. சேவை வழங்குநர்கள் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை அலுவலகத்தில் அலுவலக நாட்களில் 27.10.2023 தொடக்கம் 09.11.2023 ஆம் திகதி மு.ப 09.00 முதல் 15.00 மணிவரை மீளளிக்கப்படாத பெறுகைப் படிவக் கட்டணமாக ரூபா 2,000.00 (VAT,NBT நீங்கலாக) இனைச் செலுத்தி பெறுகை விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக்கொள்ள முடியும்.
6. கேள்வி ஆவணங்கள் 10.11.2023 ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு **தலைவர், பெறுகைக்குழு, பிரதேச சபை, பளை** எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது அலுவலகத்தில் உள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும்.
7. பெறுகைப் பத்திரம் உள்ளடங்கிய கடித உறையின் **இடது பக்க மேல் மூலையில் பெறுகை இலக்கம்** எழுதப்படல் வேண்டும்.
8. பெறுகைப்பத்திரங்கள் அனைத்தும் பெறுகை நேரமுடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்.
9. கிடைக்கப்பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள்பெறுகைக் கோரலை கோருவதற்கும் பெறுகைக்குழுத் தலைவருக்கு அதிகாரம் உள்ளது.
10. கேள்வி கோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் 02.11.2023 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச சபை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்தச் செலவில் கலந்துகொள்ளமுடியும்.

**திருமதி.தர்சினி தயானந்தன்,**
**தலைவர்,பெறுகைக்குழு,**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.**

27.10.2023

(சி-7496)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 319





சித்திர விசித்திரமாக அமைந்த நாடகசாலைக்கு எதிரே அரண்மனை நிலா முற்றத்தில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் கூடியிருந்து நாடகங்களைக் கண்டுகளித்தார்கள். அரண்மனைப் பெண்டிர் அமர்வதற்கு ஒரு தனியான இடம், நீலப்பட்டு விதானத்தின் கீழ் முத்திழைத்த சித்திரத் தூண்களுடன் ஏற்பாடாகி இருந்தது. அதன் கீழ் மகாராணிகளும் இளவரசிகளும் அவர்களுடைய அந்தரங்கத் தோழிமார்களும் அமர்ந்து நாடகம் பார்த்தார்கள். அப்போதெல்லாம் குந்தவை தேவிக்கு அருகாமையிலேயே நந்தினி வந்து உட்கார்ந்தாள். இது மற்றப் பெண்களில் சிலருக்குப் பிடிக்கவில்லையென்றாலும் அதை அவர்கள் மனத்திலேயே வைத்துக்கொண்டு பொருமினார்களேயன்றி வேறெதுவும் செய்ய முடியவில்லை. பெரிய பழுவேட்டரையர் பழுவூர் இளையராணி இவர்களுடைய கோபத்துக்குப் பாத்திரமாக யாருக்குத்தான் துணிவு இருக்கும்? இளைய பிராட்டியே அந்தக் கர்வக்காரிக்கு அவ்வளவு மதிப்பளித்து மரியாதை செய்யும் போது மற்றவர்கள் எம்மாத்திரம்?

சோழ வம்ச மன்னர்களைப் பற்றிய மூன்று நாடகங்களில் மூன்றாவதான பராந்தக தேவர் நாடகம் மிகச் சிறந்து விளங்கியது. அன்றைக்குத்தான் நாடகம் பார்த்த ஜனங்களின் மத்தியில் ஒரு சலசலப்புத் தோன்றி வளர்ந்தது.

அதுவரை சோழ நாட்டை அரசு புரிந்த சோழ மன்னர் பரம்பரையில் சுந்தர சோழரின் பாட்டனாரான கோப்பரகேசரி பராந்தகர் வீரப் புகழில் சிறந்து விளங்கினார். சுமார் நாற்பத்தாறு ஆண்டுகள் இவர் ஆட்சி நடத்தினார். அவருடைய காலத்தில் சோழ சாம்ராஜ்யம் விரிந்து பரவியது. ஈழநாட்டிலிருந்து துங்கபத்திரை நதி வரையில் அவருடைய ஆணை சென்றது. பல போர்கள் நடந்தன. மகத்தான வெற்றி கிடைத்தது. 'மதுரையும் ஈழமுங் கொண்ட கோப் பரகேசரி வர்மர்' என்ற பட்டம் பெற்றார். தில்லைச் சிதம்பரத்தில் சிற்றம்பலத்துக்குப் பொன் வேய்ந்து புகழ் பெற்றார். இவருடைய வாழ்க்கையின் இறுதியில் சில தோல்விகள் ஏற்பட்டு இராஜ்யம் சுருங்கியது. ஆனால் இவருடைய வீரப்புகழ் மட்டும் குன்றவில்லை. வடக்கே இரட்டை மண்டலத்திலிருந்து கடல் போன்ற மாபெரும் சைன்யத்துடன் படையெடுத்து வந்த கன்னரதேவன் என்னும் அரசனுடன் தக்கோலத்தில் இறுதிப் பெரும்போர் நடந்தது. இப்போரில் பராந்தகருடைய மூத்த புதல்வராகிய இராஜாதித்தர், இந்தப் பரத கண்டம் என்றும் கண்டிராத வீராதி வீரர், படைத்தலைமை வகித்தார். கன்னரதேவனுடைய சைன்யத்தை முறியடித்துவிட்டு, யானை மீதிருந்தபடி உயிர் துறந்து வீர சொர்க்கம் எய்தினார். அந்த வீரருடைய அம்பு பாய்ந்த சடலத்தை அப்படியே ஊருக்கு எடுத்து வந்தார்கள். அரண்மனையில் கொண்டு சேர்த்தார்கள். பராந்தக சக்கரவர்த்தியும் அவருடைய தேவிமார்களும் நாட்டைப் பாதுகாப்பதற்காக உயிர் துறந்த வீரப் பெருமகனின் உடலைத் தங்கள் மத்தியில் போட்டுக் கொண்டு கண்ணீர் பெருக்கினார்கள். திரைக்குப் பின்னாலிருந்து அசரீரி வாக்கு "வருந்தற்க! வருந்தற்க! இளவரசர் இராஜாதித்தர் இறக்கவில்லை. சோழநாட்டு மக்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் கோயில் கொண்டு விளங்குகிறார்." என்று முழங்கிற்று. இந்த இறுதிக் காட்சியுடன் நாடகம் முடிவடைந்தது.

அந்தத் தலைமுறைக்கு முந்திய தலைமுறையில் நடந்த வீர சம்பவங்கள் நிறைந்த இந்த நாடகத்தை ஜனங்கள் பிரமாதமாக ரசித்து மகிழ்ந்தார்கள். சபையோருக்குள்ளே சலசலப்பு ஏற்பட்டதன் காரணம் என்னவென்றால், பராந்தக தேவரது காலத்தில் நடந்த பெரும் போர்களில் அவருக்கு இரண்டு சிற்றரசர்கள் அருந்துணையாக இருந்தார்கள். ஒருவர் கொடும்பாளூர் சிற்றரசர். இன்னொருவர் பழுவூர்க் குறுநில மன்னர். இந்த இருவரும் சோழ வம்சத்தாருடன் உறவுத் தளையினால் பிணைக்கப்பட்டவர்கள்.

பெண் கொடுத்துப் பெண் வாங்கியவர்கள். இரு வரும் இரண்டு கரங்களைப் போல் பராந்தகருக்கு உதவி வந்தார்கள். யார் வலக்கை, யார் இடக்கை என்று சொல்ல முடியாமலிருந்தது.

(தொடரும்...)

## தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு

## யாழ். பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்

### யாழ்.பொது நூலகம்

தென்கிழக்காசியாவிலுள்ள மிகப்பெரிய நூலகம் யாழ். நூலகமாகும். யாழ்.நகரில் எழில் கொஞ்சும் பகுதியில் கண்ணைக் கவரும் வகையில் இந்நூலகம் அமைந்துள்ளது. இலக்கியங்கள், நாவல்கள், உசாத்துணைப்பகுதி, விசேடசேர்க்கைப்பகுதி, கற்றல்பகுதி, வாசகம்பகுதி, கணனிப்பகுதி (வலைப்பின்னல்), ஆவணப்படுத்தல் பகுதி எனப் பல பகுதிகளைக் கொண்டு தனது சேவைகளை விரிவுபடுத்தியுள்ளது.

பெருந்தொகையான நூல்களைக் கொண்டு ஆயிரக்கணக்கான வாசகர்களை தன்னுள் கொண்டுள்ளமை யாழ். நூலகத்திற்கே உரிய சிறப்பாகும்.

யாழ்.பொதுநூலகம் 1981 மே மாதம் 31 ஆம் திகதி அழிக்கப்பட்டமை பலரின் மனதைப் பெரிதும் வாட்டியது. இதனால் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான கிடைத்தற்கரிய நூல்கள் எரிந்து சாம்பலாகிப் போயின.

யாழ்.பொதுநூலகம் எரிக்கப்பட்ட சம்பவத்தை அறிந்த தாவிது அடிகளார் அதிர்ச்சியால் மரணமானார். அதன் பின்னர் கட்டிமுடிக்கப்பட்டவையே நாம் சென்று பயனடையும் யாழ். பொதுநூலகம் ஆகும்.

ஜெ.கெளசிகன்.

## அன்பு

அன்பு தானே கொடுக்கும், தன்னையே கொடுக்கும். ஆனால் அதை விலைக்குப் பெற முடியாது.

-லாங்ஃபெல்லோ

அன்பிலார் எல்லாந்தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு.

-திருவள்ளுவர்

நாம் எதில் அன்பு செலுத்துகிறோமோ, அதுவே நம்மை உருவாக்கி நம்பண்பாயமைகிறது.

-கெதே

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமானது ஆரும் அறிகிலார்.

-திருமூலர்

அன்பு செய்யும் வரை மனிதன் ஒழுக்கக் கேடுடையவனாக முடியாது.

-சார்ல்ஸ் லாம்

இவ்வுலகில் நாம் பெறும் பேரின்பத்தின் மணிமுடி ஒருவர்க்கொருவர் அன்பு காட்டுதலே

-மில்ட்டன்

அன்பு உலகைக் காண்பது கண்கொண்டல்லா உளாங்கொண்டு.

-ஷேக்ஸ்பியர்

யே.ஷயானா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல காரியங்களைச் செய்ய ஒருபோதும் பயப்படா தீர்கள்! தாமதமின்றி நல்ல காரியங்களைச் செய்யுங்கள்! – நெப்போலியன் ஹில்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## காகத்தின் கூட்டில் முட்டையிடும் குயில் போல...

எலி வளையானாலும் தனி வளை வேண்டும் என்றொரு பழமொழி நம் தமிழ் மொழியில் உண்டு.

அந்தப் பழமொழிக்குள் உரிமை, இறைமை, சுதந்திரம் உள்ளிட்ட கௌரவமான வாழ்வுக்குரிய அடிப்படை உள்ளடங்கியுள்ளது.

ஆக, எச்சந்தர்ப்பத்திலும் மற்றவர்களுடைய தொந்தரவு இல்லாமல் வாழ வேண்டும்.

இதேபோன்றதுதான் எல்லாமும். ஆம், ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டின் ஜனாதிபதியாக இருந்தாலும் அவர் தற்துணிவோடு எதனையும் செய்ய முடியாத நிலைக்கு ஆளாயிருப்பதைக் காண முடியும்.

இதற்குக் காரணம் மகிந்த ராஜபக்ஷ தரப்பினரின் ஆதரவோடு ஜனாதிபதிப் பதவியைப் பொறுப்பேற்றுக் கொண்டமையாகும்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று அந்தப் பதவியில் அமரும்போது, அங்கு ஜனாதிபதியாக இருப்பவர் தற்துணிவோடு தீர்மானங்களை எடுக்க முடியும்.

ஆனால் இன்னொருவரின் தயவில் ஜனாதிபதியாக இருக்கும்போது, எந்தத் தீர்மானத்தையும் எடுக்க முடியாத குழப்பமான நிலைமையே காணப்படும்.

அதாவது நாட்டின் நலன் கருதி பொதுமக்களின் விருப்பத்துக்கு அமைவான தீர்மானங்களை எடுப்பதைவிட, தனக்கு ஆதரவு தருகின்ற தரப்பு எதை விரும்பும் என்று பார்த்து, அவர்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தாத வகையிலேயே தீர்மானம் எடுக்கப்படும்.

இவ்வாறு எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் ஒருபோதும் நாட்டுக்குப் பயனுடையதாக இருக்க மாட்டாது.

மாறாக நான் ஜனாதிபதியாக இருக்கையில் மக்களின் நலன்கருதிய தீர்மானங்களையே எடுப்பேன் என்றால், ஆதரவு தருகின்ற தரப்பு கலைவாரிவிடும்.

இதற்கு நல்ல உதாரணம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

ஆம், கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதிப் பதவியில் இருந்து மக்களால் துரத்தப்பட்டபோது, ராஜபக்ஷ தரப்புகளுடன் இரகசியமான முறையில் தொடர்பைப் பேணிக் கொண்டிருந்த ரணில் விக்கிரமசிங்கவை கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக நியமித்துவிட்டு நாட்டை விட்டுத் தப்பிச் சென்றார்.

அன்றைய சூழலில் ரணிலை ஜனாதிபதி ஆக ஆக்குவது ராஜபக்ஷ தரப்புக்குத் தேவையாக இருந்தது.

அதேநேரம் இந்த நாட்டின் ஜனாதிபதியாக ஒருமுறையேனும் இருந்துவிட வேண்டும் என்ற ஆசையில் இருந்த ரணிலுக்கு அது பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோல அமைந்தது.

ஆனால் இப்போதுதான் அதன் தாற்பரியத்தை ஜனாதிபதி ரணில் அனுபவிக்கின்றார்.

ஆம், அண்மையில் அமைச்சர்களை மாற்றம் செய்தமைக்காக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தொலைபேசியில் தொடர்பு கொண்ட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவரைத் திட்டித் தீர்த்தார் எனும்போது இந்த நாட்டின் ஜனாதிபதிப் பதவி எந்தளவுக்கு நலினப்பட்டுள்ளதென்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

என்ன செய்வது காகத்தின் கூட்டில் முட்டையிடும் குயில்கள் காகத்திடம் கொத்து வாங்கித் தானாக வேண்டும்.

# இந்தியாவுடன் மீண்டும் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கிறது இலங்கை-ஜனாதிபதி ஊடகப்பிரிவு

(கொழும்பு)

இந்தியாவுடனான உத்தேச பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தம் தொடர்பான 12 ஆவது சுற்று பேச்சுவார்த்தையை இலங்கை அடுத்த மாதம் ஆரம்பிக்கவுள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தற்போதைய இந்தியா-இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை விரிவுபடுத்துதல் மற்றும் ஆழமாக்குதல் தொடர்பில் இரு நாடுகளும் 2016 முதல் 2019 வரை 11 சுற்று இருதரப்பு பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளன.

இந்த விரிவான ஒப்பந்தம் தற்போதைய இந்தியா-இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை விட பரந்த நோக்கத்தை கொண்டுள்ளதாகவும் இது இரு நாடுகளுக்கும் இடையே ஆழமான பொருளாதார உறவுகளை அடிக்கோடிட்டுக் காட்டுவதாகவும் ஜனாதிபதி ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனூடாக விநியோக திறனை விரிவுபடுத்துதல் மற்றும் சந்தை அணுகலை விரிவுபடுத்துதல் ஆகிய இரண்டு முக்கிய கூறுகளுக்கு வலுவான முக்கியத்துவத்தை அரசாங்கம் அளிப்பதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-5-6)

# 4780 பல்நோக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு உடனடி நியமனம்-பிரதமர் பணிப்புரை

(கொழும்பு)

இதுவரை நியமனம் வழங்கப்படாதுள்ள பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர்களுக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் நியமனங்களை வழங்குமாறு அரச அதிகாரிகளுக்கு பிரதமர் தினேஷ் குணவர்தன பணிப்புரை விடுத்துள்ளார்.

பல்நோக்கு அபிவிருத்தி செயலணி திணைக்களத்தின் செயற்பாடுகள் மற்றும் நியமனத்தை விரைவுபடுத்துதல் தொடர்பான கலந்துரையாடல் பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் பிரதமர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

இந்த கலந்துரையாடலில், அரசாங்க ஆட்சேர்ப்பு செயல்முறையை மீளாய்வு செய்வதற்காக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட உத்தியோகபூர்வ குழுவினால் இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டது.

தற்போது அரச சேவையில் உள்ள ஆரம்ப சேவை வெற்றிடங்களுக்கு பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர்களை நியமிக்குமாறு பணிப்புரை வழங்கப்பட்டுள்ள போதிலும் சில அமைச்சுக்களில் இதுவரை நியமனங்கள் வழங்கப்படவில்லை.

இதன்படி, இதுவரையில் நியமனம் வழங்கப்படாத பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர்களுக்கு எதிர்வரும் நவம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் நியமனம் வழங்கி, உரிய நிறுவனங்களுக்கு அவர்களை நியமிக்குமாறு பிரதமர் தினேஷ் குணவர்தன அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். (நி-5-6)

# 2024 வரைதான் ஜனாதிபதிக்கு ஆதரவு பெரமுன தீர்மானம்

(கொழும்பு)

2024 ஆம் ஆண்டு வரை மட்டும்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கப்படும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாம் அரசாங்கத்தை அமைத்திருந்தாலும், இது தற்காலிக அரசாங்கமொன்று தான். 2024 ஆம் ஆண்டுவரை மட்டும்தான் இந்த அரசாங்கம் இருக்கும்.

இந்த அரசாங்கத்தை நடுவில் உடைத்து, முட்டாள்த்தனமான வேலையை செய்யவும் நாம் தயாரில்லை. ஜனாதிபதிக்கோ அமைச்சரவைக்கோ நாட்டை வழிநடத்த முடியாவிட்டால், உடனடியாக தேர்தல் ஒன்றுக்கு செல்ல வேண்டும்.

அல்லாவிட்டால் நாட்டில் காட்டுச் சட்டம் வந்துவிடும். மக்கள் தான் அரசாங்கத்தை தீர்மானிக்க வேண்டும். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மனதில் என்றும் மகிந்த ராஜபக்ஷ தான் உள்ளார்.

அரசாங்கமானது, சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்காக நாட்டு மக்களை துன்பத்திற்குள் தள்ளியுள்ளது. மக்கள் மரணித்த பின்னர், ஐ.எம்.எப் இன் கடனுதவி கிடைத்தும் பலனில்லாமல் போய்விடும்.

எனவே அரசாங்கம் இது தொடர்பாகவும் சிந்தித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

# ஜப்பான் நிதியுதவி

(கொழும்பு)

இலங்கையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மீன்பிடி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ஜப்பான் 200 மில்லியன் யென் உதவித் தொகை வழங்க தீர்மானித்துள்ளது.

மீன்பிடி மற்றும் நீரியல் வளத் திணைக்களத் திருகுளிரூட்டி வசதிகளுடன் கூடிய உழவு இயந்திரங்கள், இலங்கை மீன்பிடி துறைமுகக் கூட்டுத்தாபனத்திற்கு ஐஸ் உற்பத்தி இயந்திரங்கள் மற்றும் டிஜிட்டல் அளவீட்டு இயந்திரங்கள், தேசிய நீர்வாழ் வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு வலைகள் வழங்க ஜப்பான் திட்டமிட்டுள்ளது. (நி-5-6)

# திவுலுப்பொத்தானையில் இருந்து சிங்களவரை வெளியேற்ற முயற்சி

## மனித உரிமை ஆணைக்குழு தலையிட வேண்டும் என்கிறார் சுமணரத்னதேரர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பின் திவுலுப்பொத்தானையிலிருந்து சிங்கள மக்களை வெளியேற்ற முயற்சிகள் இடம்பெறுவதாக தெரிவித்துள்ள அம்பிட்டியே சுமணரத்ன தேரர் அந்த மக்களை பாதுகாப்பதற்காக இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழு உடனடியாக தலையிடவேண்டும்என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கையின் மனித உரிமை ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்துள்ள நான்கு பக்க கடிதத்தில் அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அதில் அவர் தெரிவித்துள்ளதாவது, எதிர்வரும் ஜனாதி பதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளிப்பது தொடர்பில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பிற்கும்இடையில் எட்டப்பட்டுள்ள உடன்படிக்கை காரணமாக விக்கிரமசிங்க ராஜபக்ஷ அரசாங்கம் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு திவுலுபொத்தானையிலும் அதனை சுற்றியுள்ள கிராமங்களிலும் உள்ள மக்களை அச்சுறுத்துவதற்கு அனுமதித்துள்ளது.

அரசியல் தலைமைத்துவத்தின் சார்பில் மகாவலி அதிகாரிகளும் பொலிஸாரும் கிழக்கு மாகாணத்திலிருந்து சிங்களவர்களை வெளியேற்றும் தமிழ்தேசிய கூட்டமைப்பிற்கும் ஏனையவர்களுக்கும் ஒத்துழைப்பு வழங்குகின்றனர்.

இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளவர்களில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியனும் கிழக்கு மாகாண ஆளுநரும் முக்கியமானவர்கள்.

ஏனைய சமூகங்களிற்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளை சிங்கள சமூகத்தினரிடமிருந்து பறிப்பதற்கான திட்டமிட்ட நடவடிக்கைகள் இடம் பெறுகின்றன. திவுலுப் பொத்தானையில் சிங்களவர்கள் நீண்ட காலமாக வசிக்கின்றனர். அங்கு 80 தொல்பொருள் இடங்கள் காணப் படுகின்றன என அவர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
## பொலநறுவை யுகத்திற்குப்பின் கண்டி இராச்சியத்தின் வீழ்ச்சி வரை - பகுதி II

21

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



இந்த அரசகேசரியின் மகன் வழிப்பேரன் தான் தமிழில் இரகுவம்சம் பாடிய அரசகேசரி என்பர் சிலர். வள்ளியம்மைக்கு முறையே பரநிருபசிங்கன், காசிநயினார், பெரியபிள்ளை என்று மூன்று மகன்களும் மரகதவல்லி என்று ஒரு மகளும் இருந்தனர். இம் மர கதவல்லியின் மணவாளனே இரகுவம்சம் பாடிய அரசகேசரியாவார்.

கடலில் முத்துக்குளிக்கும் மணவர்களை மேற்பார்வை செய்ய சென்ற போது, சிங்கை பரராசசேகரன் "மணவ குடியிற்மலர்ந்த மல்லிகை" என்று அழைக்கப்படும் மங்கத்தம்மாளின் அழகில் மயங்கி, அவள் மீது மையல் கொண்டு அவளை தனது ஆசைநாயகியாக்கிக் கொண்டான். இவர்களுக்கு பிறந்தவர்கள் சங்கிலியன் என்னும் மகனும் பரவையார் என்ற மகளுமாகும்.

சிங்கை பரராசசேகரன் தனது பிள்ளைகள் மீது அளவு கடந்த அன்பு கொண்டிருந்தமையால் சங்கிலியனின் தவறான போக்கை கண்டிக்கவில்லை என்பர். மன்னன் மாசிமகம் கொண்டாட கும்பகோணம் சென்ற போது, அங்கு உள்ளூர் அரசன் ஒருவனை, சங்கிலியன் அவமதித்ததால் அவன் சினம் கொண்டு இவர்களை சிறையிலிட்டிருந்தான். தந்தையையும் தம்பியாகிய சங்கிலியனையும் படையுடன் சென்று மீட்டு வந்தான் பரநிருப சிங்கன். சிங்கை பரராசசேகரன் இதனால் மகிழுந்து மகனாகிய பரநிருப சிங்கனுக்கு ஏழு ரதிபன் என்னும் பட்டத்தையும் ஏழு ஊர்களையும் நன்கொடையாக வழங்கினான்.

ஆனால் இப்பிரச்சினைக்கு பொறுப்பான சங்கிலியனைத் தண்டிக்கவில்லை, இதனால் சங்கிலியனின் போக்கில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. 1515 ஆம் ஆண்டளவில் முதலில் பட்டத்து இளவரசனாகிய சிங்கவாகுவின் உணவில் நஞ்சு கலந்து கொன்றான். இதன் பின் 1520 ஆம் ஆண்டளவில் சிறிய தகப்பனாகிய சிங்கை செகராசசேகரனிடம் மூலிகை மருத்துவம் கற்ற பரநிருபசிங்கன், கண்டி அரசியின் நோய் தீர்க்க கண்டி சென்ற போது, தனது மற்ற அண்ணனாகிய பண்டாரத்தை வெட்டிக் கொன்று விட்டு, தந்தை உயிருடன் இருக்கும் போதே யாழ்ப்பாண அரசின் முடியை கவர்ந்த சங்கிலியன், தானே சூடிக் கொண்டான். சங்கிலியனின் இக்கொடும் செயலால் துயரம் அடைந்த மன்னவன், உள்ளம் உடைந்தும் மதிபேதலித்தும் போன நிலையில் ஊமையாக சில காலம் வாழ்ந்து, உயிர் துறந்தான் என்பர்.

### சங்கிலியன் (1519-1560)

பரராசசேகரனின் ஆசை நாயகியின் மகனான சங்கிலியன், சங்கிலியன் பண்டாரம் அல்லது முதலாம் சங்கிலி பண்டாரம் அல்லது ஏழாம் செகராசசேகரன் என அழைக்கப்பட்டான். இவன் 1519 தொடக்கம் 1561 வரை யாழ்ப்பாண அரசை ஆண்ட அரசன் ஆவான். போர்த்துக்கேயருடைய குறிப்புக்கள் இவரை ஒரு கொடூரமான அரசனாகக் காட்டுகின்றன. இறுதிவரை பல வழிகளிலும் யாழ்ப்பாணத்துக்குள் புக முயன்ற போர்த்துக்கேயரைத் துணிந்து எதிர்த்து நின்றவன்.

பரராசசேகரனின் பட்டத்தரசியின் மூத்த மகன் சடுதியாக இறந்தான். பின்னர் இளவரசுப் பட்டம் சூட்டிக் கொண்ட இரண்டாவது மகனும் வாளால் வெட்டிக் கொல்லப்பட்டான். இருவரையும் சங்கிலியனே கொன்றான் என்றும் இரண்டாவது மனைவியின் மூத்த மகனான பரநிருபசிங்கத்தை ஏமாற்றி அரசுரிமையைச் சங்கிலியன் கைப்பற்றிக் கொண்டான் எனவும் வைபவமாலை கூறுகிறது.

போர்த்துக்கேயருக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தை ஆண்ட ஒல்லாந்தரின் சங்கிலியனைப் பற்றிய குறிப்பு ஒன்றில் அவனைச் சியங்கேரி என்னும் பெயரால் குறித்துள்ளனர். இக்குறிப்பில் இவ்வரசன் 42 ஆண்டுகளுக்கு மேல் யாழ்ப்பாணத்தை ஆண்டதாகவும் பின்னர் போர்த்துக்கேயர் அவனது அரசாட்சியை அழித்து விட்டு 97 ஆண்டுகள் ஆண்டதாகவும் கூறப்பட்டுள்ளது. இதை அடிப்படையாக வைத்தே சுவாமி ஞானப்பிரகாசர் சங்கிலி ஆட்சி 1519 ஆம் ஆண்டிலிருந்து 1561 ஆம் ஆண்டு வரை இருந்ததாகக் கணித்துள்ளார்.

### சங்கிலியனும் போர்த்துக்கேயரும்

சங்கிலியன் யாழ்ப்பாணத்தை ஆண்ட காலம், போர்த்துக்கேயர் இலங்கையில் தொடர்புகளை ஏற்படுத்தியிருந்த காலமாகும். இலங்கையின் அரசியலிலும் தலையிடத் தொடங்கியிருந்தனர். இவர்களுடன் வந்த கத்தோலிக்கக் குருமார்கள் சமயப் பிரசாரங்களிலும் மதமாற்றங்களிலும் ஈடுபட்டிருந்தனர். போத்துக்கேயர் இந்தியாவிலும் இலங்கையிலும் தமது ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்குப் படை பலத்தை மட்டுமன்றிக் கத்தோலிக்க சமயத்தையும் வணிகத்தையும் கூட ஆயுதங்களாகப் பயன்படுத்துவதை அறிந்திருந்த சங்கிலி, போத்துக்கேயரின் இத்தகைய எல்லா நடவடிக்கைகளையுமே கடுமையாக எதிர்த்து வந்தான்.

அவர்களின் இந்த நடவடிக்கைகளுக்குத் துணை போனவர்களையும் இரக்கம் பாராமல் தண்டித்தான். இதன் காரணமாகவே போத்துக்கேயர், முக்கியமாகப்போத்துக்கேய மத போதகர்கள் இவனை வெறுத்தனர். இதன் பின்னணியிலேயே சங்கிலியைப் பற்றிப் போர்த்துக்கேயர் எழுதி வைத்திருக்கும் குறிப்புக்களைப் புரிந்து கொள்ள வேண்டும். பிற நாட்டவரான போர்த்துக்கேயர் மிக மோசமாகச் சங்கிலி மன்னனைத் தூற்றி எழுதியதானது சங்கிலி நாட்டுப்பற்று மிக்கவனாகவும் அந்நியர் ஆதிக்கத்தை வெறுப்பவனாகவும் இருந்தான் என்பதையே காட்டுவதாகச் சில வரலாற்றாளர்கள் கருதுகிறார்கள். இவன் மிகவும் தைரியமுள்ள, கடும்போக்கான மன்னன் என்பது அவர்களது கருத்து.

சங்கிலி மன்னன் காலத்தின் முற்பகுதியிலும் அதற்கு முன்னரும் யாழ்ப்பாண அரசு கடலில் குறிப்பிடத்தக்க பலம் கொண்டதாக இருந்ததுடன் கடல் கடந்த வணிகத்தின் மூலமும் பெருமளவு வருமானம் பெற்று வந்தது. இப்பகுதியில் போர்த்துக்கேயரின் வணிக முயற்சிகள் யாழ்ப்பாண நாட்டின் நலனுக்குப் பாதகமானது என்பதை உணர்ந்திருந்த சங்கிலி, 1540 களில், போர்த்துக்கேய வணிகக் கப்பல்கள் முதன் முதலாக யாழ்ப்பாணத் துறைமுகங்களுக்கு வர முயன்ற போது தனது படைகளை அனுப்பிக் கப்பல்களையும் பொருட்களையும் பறிமுதல் செய்தான்.

தான் போர்த்துக்கேயருக்கு எதிராகச் செயற்பட்டது மட்டுமன்றி, அவர்களுக்கு எதிராகச் செயற்பட்ட சிங்கள மன்னர்களுடனும் சங்கிலி சேர்ந்து செயற்பட்டான். போர்த்துக்கேயருக்கு எதிராகப் போராடிய தென்னிலங்கை சீதாவாக்கை இராச்சியத்தின் மன்னன் மாயாதுன்னை தென்னிந்தியாவிலிருந்து படைகளை வரவழைத்த போது, அப்படைகள் யாழ்ப்பாண நாட்டினூடாகச் செல்ல சங்கிலியன் உதவினான். அக்காலத்தில் கோட்டே அரசனான புவனேகபாகு போர்த்துக்கேயருடன் உறவு கொண்டு அவர்களுக்குத் தனது நாட்டில் பல வசதிகளையும் அளித்திருந்தான். அத்தோடு யாழ்ப்பாண அரசையும் தனதாக்கித் தந்தால் மேலும் பல சலுகைகளை அளிப்பதாகவும் உறுதி அளித்தான். இதனால் கோட்டே அரசனின் உடன்பிறந்தானும் அவனுக்கு எதிரியுமாயிருந்த சீதாவாக்கை இராச்சியத்தின் அரசனான மாயாதுன்னையுடன் கூட்டுச் சேர்ந்து, சங்கிலி புவனேகபாகுவை எதிர்க்க முற்பட்டான். கண்டி அரசனான விக்கிரமபாகுவையும் தங்களோடு சேர்த்துக் கொண்டு 1545 ஆம் ஆண்டில் கோட்டே மீது இவர்கள் படையெடுத்தனர். ஆயினும் வெற்றி கிட்டவில்லை. இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் தஞ்சாவூர் நாயக்க மன்னனிடம் இருந்து பெற்ற படை உதவியுடன் மாயாதுன்னையையும் சேர்த்துக் கொண்டு சங்கிலி மன்னன் கோட்டேயைத் தாக்கினான். தொடக்கத்தில் போர் நிலை யாழ்ப்பாண-சீதாவாக்கைக் கூட்டுப் படைகளுக்குச் சாதகமாக இருந்தது. எனினும், இறுதி வெற்றி கிடைக்கவில்லை.

1549 ஆம் ஆண்டளவில் மாயாதுன்னை, கோட்டே அரசனுக்கு எதிராக போர்த்துக்கேயருடன் தொடர்பு வைத்துக் கொள்ள முற்பட்டான். போர்த்துக்கேயரும் கோட்டே அரசன் மீது ஐயுறவு கொண்டனர். இதை அறிந்த புவனேகபாகு, போர்த்துக்கேயருக்கு எதிராக இலங்கை அரசர்களை ஒன்றிணைக்க முற்பட்டான். அவனது வேண்டுகோளைப் பிற இலங்கை அரசர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. எனினும், சங்கிலியன் தான் இனிமேல் கோட்டேயைத் தாக்குவதில்லை எனப் புவனேகபாகுவுக்கு வாக்குக் கொடுத்தான். இவ்வாறான நடவடிக்கைகளில் இருந்து சங்கிலி மன்னனின் வெளியுறவுக் கொள்கை போர்த்துக்கேயரை எதிர்ப்பதையே மையமாகக் கொண்டிருந்ததை அறிய முடிகிறது.

### மன்னார்ப் படுகொலைகள்

தாம் கைப்பற்ற எண்ணியிருக்கும் நாடுகளில் தமது மதத்தைப் புகுத்துவதன் மூலம் தமக்கு ஆதரவான மக்களை உள்நாட்டிலேயே உருவாக்கிக் கொள்ளும் உத்தியை போர்த்துக்கேயர் கொண்டிருந்தனர். தமது மத நிறுவனங்களைப் போர் நோக்கங்களுக்குப் பயன்படுத்தக் கூடியதாக வளர்த்து எடுத்தனர். உள்நாட்டு அரசுகளைப் படை பலத்தின் மூலமாயினும் கட்டுப்படுத்தித் தமது செல்வாக்கை வளர்த்துக் கொள்வதில் போர்த்துக்கேயக் குருமார்கள் தீவிரம் காட்டினர். இதை முன்னரே உணர்ந்து கொண்ட சங்கிலி மதமாற்ற முயற்சிகளுக்கு எதிராகவும் கடுமையாக நடந்து கொண்டான். யாழ்ப்பாண அரசைச் சேர்ந்த மன்னார்ப் பகுதியில் பெருமளவில் மதமாற்றம் நடைபெற்றதைக் கேள்வியுற்று, மன்னாரில் புனித சவேரியாரின் பாதிரியார்களால் கத்தோலிக்க மதத்துக்கு மாறியவர்களையெல்லாம் வெட்டிக் கொன்றான்.

தமது மதமாற்ற முயற்சிகளுக்கு இடையூறாக இருக்கும் சங்கிலியைப் பழி வாங்க வேண்டும் என்பதில் போர்த்துகேயக் குருவான புனித சவேரியார் மிகவும் தீவிரமாக இருந்தார். கோவாவில் இருந்த போர்த்துக்கேய ஆளுநரைக் கண்டு தனது வேண்டுகோளை அவர் முன்வைத்தார். அவரது வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட ஆளுனர், அதை உடனடியாகச் செயற்படுத்த முடியாது என்றும் கூறி விட்டார். (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23 வயது...

கிளிநொச்சி வட்டக்கச்சி 5ஆம் வீட்டுத்திட்டம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் கல்மடுநகர் - சம்புக்குளம் பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

வெற்றிலை வாங்குவதற்காக கடைக்குச் சென்ற அவருக்குத் தொலைபேசி அழைப்பு ஒன்று வந்துள்ளது. அந்த அழைப்பின் பின்னர் அவர் கடையை விட்டு மோட்டார் சைக்கிள் ஒன்றைக் கடந்து சென்றுள்ளார்.

சற்று நேரத்தில் சத்தம் கேட்டது. அதன் பின்னர் இருவர் சம்பவ இடத்தை விட்டு ஓடினர். இரவு என்பதால் அடையாளம் காண முடியவில்லை எனப் பொலிஸாரின் விசாரணையின்போது சம்பவத்தை அவதானித்தவர்கள் சாட்சியம் வழங்கியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் இராமநாதபுரம் பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். அவர் கட்டையால் தாக்கப்பட்டு உயிரிழந்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

மரணம் தொடர்பில் சம்பவ இடத்திற்கு சென்று நீதவான் விசாரணைகள் முன்னெடுத்த பின்னர் சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படும் எனவும், விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் அது கையளிக்கப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களைக் கைது செய்யும் நடவடிக்கையில் குற்றத்தடுப்பு பொலிஸாரும் ஈடுபட்டுள்ளனர். (ம-7,100,316)

## மூன்று...

விவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

சீனாவுக்குச் சொந்தமான "ஷி யான் 6" என்ற ஆய்வுக் கப்பல் நேற்று முன்தினம் பிற்பகல் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது.

இதன்படி, எரிபொருள் மற்றும் ஏனைய பொருள்களை பெற்றுக்கொள்வதற்காக கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிடுவதற்கு இலங்கை அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-7)

## பாடசாலைகளு...

வுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

மூன்றாம் தவணை கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்படும் எனவும் கல்வி அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது. (ம-7)

## அதிக போதை...

இந்நிலையில் தாயார் கதவை திறக்க முற்பட்டபோது அது திறபடவில்லை. இந்நிலையில் தாயார் கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்தவேளை அவர் மயங்கிய நிலையில் காணப்பட்டார்.

அவரை மீட்டு வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவேளை அவர் உயிரிழந்துள்ளார்.

பரிசோதனையில் அவர் அளவுக்கதிகமான போதை எடுத்தமை தெரிய வந்துள்ளது.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7,33,104)

## 20 ஆயிரம்...

தாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பொதுச் செயலாளர் மகிந்த ஜயசிங்கவும் கருத்து வெளியிட்டுள்ளார்.

அகில இலங்கை அரச முகாமைத்துவ உதவி அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் உதேனி திஸாநாயக்க ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு, வாழ்க்கைச் செலவுக்கு ஏற்றவாறு சம்பள அதிகரிப்பு தேவைப்படுவதாக தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட புகையிரத தொழிற்சங்க கூட்டமைப்பின் இணை அழைப்பாளர் டி.எம்.பி.அபேரத்ன, சம்பள உயர்வு வழங்கப்படாவிட்டால் எதிர்காலத்தில் அனைத்து தொழிற்சங்கங்களும் இணைந்து பாரிய போராட்டமொன்றை நடத்தவுள்ளதாக தெரிவித்தார். (ம-7)

## சுமந்திரன்...

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிலையில், குறித்த கூட்டத்தில் பங்கேற்ற யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான எம்.ஏ.சுமந்திரன் கூட்டத்தில் கலந்து கொண்டதோடு தான் கூட்டத்தில் இடை நடுவே வெளியே செல்ல வேண்டும் என ஏற்கெனவே தலைவருக்கு அறிவித்திருந்த போதிலும் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது அவர் வெளியேறியுள்ளார்.

அதேவேளை, அவர் வெளியேறிய போது நக்கலாக கடற்றொழில் அமைச்சர், வெளிநடப்பா? அல்லது வெளியே போகிறார்களா? என சிரித்த படி வினவியபோது நான் ஏற்கெனவே உங்களிடம் கூறிவிட்டேன் நானே இடைநடுவே போய்விடுவேன் என அதன்படி செல்கின்றேன் எனக் கூறியுள்ளார்.

இதன்போது கூட்டத்தில் அமைதியின்மை ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,33)

## ஆராயும்...

குழுவின் தலைவராக வடமாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் நியமிக்கப்பட்டுள்ளார்,

நகர அபிவிருத்தி அதிகார சபையினால் யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள எட்டுதிட்டங்கள் தொடர்பில் நேற்று ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

குறித்த திட்டங்களுக்கான காணிகளை வழங்குவதற்கு ஒருங்கிணைப்பு குழுவின் அனுமதி வழங்குமாறு நிறுவனத்தின் பணிப்பாளரால் கோரிக்கை விடுக்கப்பட்டபோது காணி வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

அதனையடுத்து ஒருங்கிணைப்பு குழுவின் தலைவரினால் எட்டு திட்டங்கள் தொடர்பில் ஆராய்ந்து, அவை தலைவர் சி.வி.கே.சிவஞானம், ஜனாதிபதியின் வடக்குக்கான இணைப்பாளர் மற்றும் அந்தந்த பிரதேச செயலர்கள் அடங்கிய குழுவை அறிக்கை சமர்ப்பிக்குமாறு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (ம-7,33)

## காங்...

விடயம் தொடர்பாக பிரஸ்தாபிக்கப்பட்டது.

அதாவது, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரியினால், தொழில் நுட்ப பூங்கா உட்பட 8 அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்வதற்காக காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலைக்கு சொந்தமான காணி உட்பட அடையாளப்படுத்தப்பட்ட காணிகளை வழங்குமாறு நேற்றைய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

இதுதொடர்பாக கருத்து தெரிவித்த மக்கள் பிரதிநிதிகள், ஏற்கெனவே தேசிய பாதுகாப்பு காரணங்களுக்காக சுவீகரிக்கப்பட்ட காணிகளில் முறையான அனுமதிகள் எவையும் பெற்றுக்கொள்ளப்படாமல் அமைக்கப்பட்ட ஜனாதிபதி மாளிகை, தற்போது தனியார் பல்கலைக்கழகத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது.

குறித்த மாளிகை அமைக்கப்பட்டுள்ளமையினால் காணிகளை இழந்த பொது மக்களுக்கு நஷ்டஈடுகளும் வழங்கப்படவில்லை.

இந்நிலையில், புதிய திட்டங்களுக்கான அனுமதிகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட வேண்டும் என்ற கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இந்நிலையில் கருத்து தெரிவித்த ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஜனாதிபதி மாளிகையை தனியார் பல்கலைக்கழகத்திற்கு வழங்குவது தொடர்பில் தீர்மானகரமான நடவடிக்கைகள் இதுவரையில் முன்னெடுக்கப்படவில்லை என்றே தான் நம்புவதாக தெரிவித்தார்.

இந்நிலையில் ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் நிறைவடைந்தபின் காங்கேசன்துறை ஜனாதிபதி மாளிகைக்கு நேற்று விஜயம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33,104)


கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3521
சீட்டிழுப்பு திகதி 26.10.2023
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கங்கள் 26 31 37 39
R 09604
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.10.26
சீட்டிழுப்பு இலக்கம் - 1309
R 45 46 50 79 R
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
07283

திகதி 26.10.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0105
Lucky 7
L7 இலக்கம் 0 8
வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள்
தனுசு 2 7 6 2 0 1

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.10.26
சீட்டிழுப்பு இலக்கம் 588
வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள்
கன்னி 11 14 22 62 கன்னி
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 26/10/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1627
V 21 18 37 54 55
22378

மஹஜன சம்பத
திகதி 2023/10/26
சீட்டிழுப்பு இலக்கம் 5279
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
T 3 9 1 2 9 1
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2253 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.10.26 தினம் வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 20 27 45 61 B
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,812,576.00
DLB

சனிதா
திகதி 2023.10.26 வெற்றி வாரம் 4414 வர்ணம் சிவப்பு
05 37 66 70 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.61,889,352.00
03387
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3965 வர்ணம் கபிலம்
சீட்டிழுப்பு திகதி 2023.10.26 தினம் வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 15 23 31 46
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,206,960/-
308764 565
DLB

கப்ருக
திகதி 26.10.2023 வெற்றி வாரம் 1429
V 07 16 40 43 50
அடுத்த சுப்பர் ஜக்பொ ரூ. 457,134,684.20
176423 647
DLB
தொலைபேசி 011-2 333 546-47
Web : www.dlb.lk

සංවර්ධන වාසනාව
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 640 திகதி 2023-10-26 வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து E வெற்றி இலக்கங்கள் 03 28 36 விதி எண் 01
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ.12,762,248.00
DLB DEVELOPMENT LOTTERIES
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோட்டிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 2079
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.64,604,032/-
03 35 60 69 T
500927
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்யாணமாலை
(இலவச திருமண சேவை)
பதவி வெற்றிடம்
முகாமையாளர் (இருபாலாரும்)
● வயதெல்லை – 40 இற்கு மேல்.
● அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.
● யாழ். நகரத்திற்கு அண்மையாக இருப்பவர்களுக்கு முன்னுரிமை
தொடர்புகளுக்கு
076 097 3121

# இராணுவத்தால் விடுவிக்கப்பட்ட காணிகளை உரிமை கோரிய பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

## காங்கேசன்துறையில் மக்களிடையே குழப்பம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை மாங்கொல்லை பகுதியில் அண்மையில் இராணுவ கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்ட தனியார் காணி பெற்றோலிய கூட்டத்தாபனத்திற்கு சொந்தமான காணி என அதிகாரிகள் உரிமை கோரி வந்தமையால் , காணி உரிமையாளர்கள் மத்தியில் குழப்ப நிலை ஏற்பட்டது.

அது தொடர்பில் தெரியவருவதாவது,

கடந்த 33 வருட காலத்திற்கு மேலாக இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த மாங்கொல்லை பகுதியில் இருந்து இராணுவத்தினர் வெளியேறியதை அடுத்து அப்பகுதி மக்கள் தமது காணிகளை அடையாளப்படுத்தி , எல்லைப் படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு உள்ளனர்.

அந்நிலையில் நேற்று வியாழக்கிழமை பெற்றோலிய கூட்டுத்தாபன அதிகாரிகள் என தம்மை அடையாளப்படுத்திக்கொண்ட சிலர் அப்பகுதிக்கு வந்து இந்த காணிகள் பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு உரியது ,நாம் கடந்த 40 வருட காலத்திற்கு முன்பே காணி உரிமையாளர்களிடம் இருந்து காணிகளை கொள்வனவு செய்து கொண்டு விட்டோம் என கூறி தனியாரின் காணிகளை தமது காணிகள் என கூறியுள்ளனர்.

காணியை நாம் யாருக்கும் விற்கவில்லை இது எங்களின் காணிகள். பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காணி தமது காணிகளில் இருந்து சற்று தொலைவில் உள்ள காணிகளே என காணி உரிமையாளர்கள் கூறி இருந்தனர்.

அதனை ஏற்க மறுத்த அதிகாரிகள். இந்த காணிகளையும் தமது நிறுவனம் கொள்வனவு செய்து விட்டதாக கூறி , இது உங்கள் காணி தான் என்பதற்கு எங்களுக்கு உறுதியை காண்பித்து , உறுதிப்படுத்துங்கள் என கூறியுள்ளனர்.

அதற்கு காணி உரிமையாளர்கள் நாங்கள் எதற்கு உங்களுக்கு உறுதி காட்ட வேண்டும் ? உங்களின் உறுதிகளை பரிசீலித்து உங்கள் காணி எங்கே இருக்கிறது என்பதனை உறுதிப்படுத்த வேண்டியது உங்கள் பொறுப்பு என கூறினர்.

அதனை அடுத்து , இந்த காணிகளையும் கொள்வனவு செய்து விட்டோம். அதற்கான உறுதிகள் எங்களிடம் உள்ளது. அதன் ஆதாரங்களுடன் வருகிறோம் என அங்கிருந்து சென்றனர். (ம-7)

# ஆனைக்கோட்டைப் பகுதியில் மாணவன் மீது தாக்குதல்

(மானிப்பாய்)

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆனைக் கோட்டைப்பகுதியில்உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் இரண்டு மாணவர் களிடையே ஏற்பட்ட மோதலில் ஒரு மாணவனின் தலையில் காயம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் மாணவனின் உறவினர்கள் பாடசாலைக்கு சென்று, பாடசாலையின் முன்னால் தகராறு செய்ததால் அப்பகுதியில் பதற்றம் நிலவியது.

இந்நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)

# காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தின் பொதுக்கூட்டம்

(வவுனியா)

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் வவுனியா மாவட்ட சங்க பொதுக்கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை வவுனியா நகர சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி யோகராசா கனக ரஞ்சனி தெரிவித்தார்.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடி அலையும் உறவுகள் குறித்த பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு நிர்வாகத்தை தெரிவு செய்ய முன்வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

SLAP
SRI LANKA PRINT 2023
ஸ்ரீ லங்கா பிரின்ட் 2023
அச்சிடல் & பொதியிடல் கண்காட்சி
B.M.I.C.H இல்
2023 அக்டோபர் 26, 27, 28ம் திகதிகளில்
காலை 9 மணி முதல் மாலை 7 வரை
Hotline +94 777 374619

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

VILLAGE HOTEL
பஸ் சேவை
JAFFNA EXPRESS
AIRPORT PICK UP DROP SERVICE
வடமராட்சி - யாழ்ப்பாணம் - கொழும்பு
வடமராட்சி - கொடிகாமம் - கொழும்பு
2800/=
(17484)
T.P: 077 544 8503

முகாமையாளர் தேவை
எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றிற்கு முகாமையாளர் (Manager) தேவை. (17559)
தொடர்புகளுக்கு
077 066 9467

அமெரிக்க அதிஷ்ட விசா
இன்னும் 07 நாட்களில் நிறைவடைகின்றன
2024 நீங்களும் அமெரிக்காவில்...
0768226244
55000 இலவச விசாக்கள்
V2 TRAVELS

CANADA
VISITOR VISA
VISITOR VISA வில் கனடா
செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்
CIMS COLLEGE
0777-068-777
V2 TRAVELS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்

SB TRAVELS
மிகச்சிறந்த குறைந்த விலையில் விமான ரிக்கெட் உங்கள் SB TRAVELS இல்.....
கனடா - RT LKR 394,000
லண்டன் - RT LKR 285,000
பலாலி & சென்னை - RT LKR 63,800
கொழும்பு & சென்னை - RT LKR 58,500
டோகா - OW LKR 59,600
இத்தாலி - OW LKR 119,000
அத்துடன் அமெரிக்காவில் குடியேறும் உங்கள் கனவை நிறைவேற்றும் அரிய வாய்ப்பிற்கான குலுக்கல் விசா விண்ணப்பம் செய்து தரப்படும்.
இச் சந்தர்ப்பம் 07th Nov 2023 வரை மட்டுமே.
Only 1000/- to Apply
Condition Apply
அது மட்டுமன்றி மலேசியா, இந்தியா, டுபாய், (B)பாங்கொக் போன்ற நாடுகளிற்கான விசாக்கள் பெற்றுத் தரப்படும்.
Hotline - 075 555 9932
Jaffna Office - 075 559 9708, 075 559 9709
Colombo 15 - 077 108 3482, 077 108 3483
Colombo 13 - 076 691 1089
(C-7499)
No 198, Kasthuriyar Road, Jaffna
SB TRAVELS
Email: SBTravelsjaffna@gmail.com

வாழ்க வையகம் குருவே துணை வாழ்க வளமுடன்
Sky Yoga
முழுமை நல வாழ்விற்கான மனவளக்கலை யோகா
Sky Yoga
தொடர்ச்சியான பயிற்சி நெறிகள்
வெள்ளி, சனி, ஞாயிறுகளில்
மாலை 6.00-8.00
பங்குபற்றும் அனைவருக்கும் காலை, மதிய உணவுகள் வழங்கப்படும்.
♥ இலங்கை பேராசிரியர்களால் நடாத்தப்படும் ஆரம்ப நிலை Sky Yoga பயிற்சிகள்
♥ நோயின்றி வாழ + எளியமுறை உடற்பயிற்சி
♥ மனநலம் பெருக - தவமும் தற்சோதனையும்
♥ உயிர் வளம்பெருக்க - காயகல்பப் பயிற்சிகள்
இடம்: யாழ் தவமையம்
வேதாத்திரி ஆன்மீக கல்வி நிலையம்
14/4, கோயில் வீதி, 1 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(17581)
தொடர்புகளுக்கு:
076 395 9293
077 088 2939

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.101, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org